Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 05 (08.04.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :187

திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
பலிக்களம்
(திருப்பாடுகளின் காட்சி)
10,11,12,13 ஏப்ரல் 2003
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம். -திருமறைக்கலாமன்றம்.
(சி-767)

## ராணுவ முகாம் இடமாற்றம் ஆராய குழு நாளை விஜயம்

யாழ்.மத்தியில் இருக்கும் இராணுவ முகாம் இடமாற்றப்படவிருக்கும் பிரதேசத்தை தேர்ந்தெடுப்பது தொடர்பாக ஆராய்வதற்கு இராணுவ அதிகாரிகள் குழுவொன்று நாளை யாழ்.வருகின்றது.

யாழ்.வரும் இந்த அதிகாரிகள், யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான, இராணுவ முகாம் அமையவிருந்த பகுதிகளையும் பார்வையிடவுளளனர். அத்தோடு, புதிதாக இராணுவ முகாம அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் இடங்களையும் இவர்கள் பார்வையிடவுள்ளனர்.

இதேவேளை - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்பகுதிகளுக்கு நாளை வருகைதரவிருக்கின்றனர்.

இந்த விஜயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா நமது ஈழநாட்டுக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், யாழ். மாநகரப் பகுதியில் இராணுவ முகாம அமைக்க வேண்டாம் என்றுதான் கூறியுள்ளோம். அதற்காக கல்லுண்டாய்ப் பகுதியை எடுங்கள் என்று கூறவில்லை. மக்களது இயல்பு வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்காத ஒரு இடத்தை எமக்குக் காட்டுங்கள் என்று (10 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள்

## யாழ்.நகரப் பாடசாலைகளில் இந்துக் கல்லூரி முன்னணி!


ஆ. கனிமொழி

இம்முறை வெளியான க.பொ.த. சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளின்படி, இதுவரை யாழ்.நகரப் பாடசாலைகள் பெற்றுக்கொண்ட முன்னணிப் பெறுபேறுகள் சில வருமாறு-

**யாழ். வேம்படி மகளிர் கல்லூரி**

கனிமொழி ஆனந்தராஜா 10A, மேரி நிரோசினி முத்துக்குமாரசாமி 9A, B, நொய்லின் தீபிகா பெனடிக்ற் 9A, B, மயூரதி சரவணபவானந்தன் 9A, B, ஜெனனி தவராஜா 9A, B, நிருசாந்தி செல்லையா 9A, B, ஷாலினி பேரின்பநாயகம் 9A, B மற்றும் இருபது மாணவிகள் 8A யும், 21 மாணவிகள் 7A யும், 18 மாண விகள் 6A யும், பதினெட்டு மாணவிகள் 5A யும் பெற்றுள்ளனர்.

**யாழ். இந்துக் கல்லூரி**

4 மாணவர்கள் 10A யும், 26 மாணவர்கள் 9A,B யும், 50 இற்கு மேற்பட்ட மாணவர்கள் 8A தரச்சித்தியும் பெற்றுள்ளனர்.

**புனித பரியோவான் கல்லூரி**

ஜி.கார்த்திகேயன் 10A, எம்.சுதர்சன 9A, B, கே.போல் தர்சன் 8A, B, C.

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

ஜெயந்தி நவரத்தினம் 9A,B, (10 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவை நேசசக்தியாக பார்க்கிறோம்

# அமெரிக்கா தடையை நீக்கவேண்டும்

## சுவிற்சர்லாந்தில் அன்ரன் பாலசிங்கம்



(ஜெனீவா)

**எமது அயல் நாடான இந்தியாவை நேசசக்தியாகவே பார்க்கின்றோம். அதேபோன்று அமெரிக்காவும் எம்மீதான தடையை நீக்கி நாம் சமாதான நடைமுறைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும் என, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று சுவிற்சர்லாந்தில் ஈழத் தமிழர்கள் நடத்திய பேரணியில் கலந்துகொண்டு பேசியபோது தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் சமீபத்தில் கிளிநொச்சியில் இருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. அதாவது, சிங்கள இராணுவம் ஆழ ஊடுருவி தாக்குதல் நடத்த அப்போது முயற்சித்தது. அது பாலசிங்கத்தைக் கொல்லுவதற்கல்ல. எமது தலைவர் பிரபாகரனை இலக்கு வைத்துத்தான் அந்தக் குழு அனுப்பி வைக்கப்பட்டது.

நான் கிளிநொச்சியில் இருக்கும் சமயத்தில், தலைவர் அநேகமாக வெளியே வந்து இராஜதந்திரிகளையும் மற்றும் பிரமுகர்களையும் சந்திபபது வழக்கம்.

ஆகவே - தலைவர் அவர்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விழிசிட்டியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்று சடலமாகக் கண்டெடுப்பு!

(யாழ்ப்பாணம்)

ஏழாலை, விழிசிட்டிப் பகுதியில் இளைஞன் ஒருவனின் சடலம் நேற்று கண்டெடுக்கப்பட்டது.

ஏழாலை தெற்கு, விழிசிட்டிப் பகுதியிலுள்ள அ.த.க. பாடசாலைக்கும் தென்னிந்தியத் திருச்சபைக்கும் இடையிலுள்ள சேதமடைந்த வீடொன்றின் மலசலகூடக் குழியிலிருந்தே மேற்படி சடலம் நேற்று மாலை 3.30 மணியளவில் கண்டெடுக்கப்பட்டது.

இப்பகுதியில் ஆடு மேய்க்கச் சென்ற நபர் ஒருவர், துர்நாற்றம் வீசியதையடுத்து அப்பகுதி கிராம சேவையாளரிடம் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பாட்டை கிராமசேவை (10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மாநாட்டின்போது சுவிஸ்ஸில் ஈழத்தமிழர் பேரணி

சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் ஐ.நா. உபமன்றில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டின் முன்பாக, நேற்று புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் மாபெரும் பேரணியை நடத்தினார்கள்.

தேசியத் தலைவர் பிரபாகரனின் முழு அளவிலான வண்ணப்படத்தை மக்கள் முன்னே தாங்கிவர, தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியும் தாங்கிவரப்பட 8 ஆயிரத்துக்கும் அதிகமான புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் உரிமைக்கான குரலை எழுப்பியவாறு நகர்ந்தனர்.

பேரணியில் பங்குகொண்ட மக்கள் தலைவரின் படங்களைத் தாங்கியவாறு- 'எங்கள் இதயத்துள் உள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்குள் தமிழீழம் அமைவது தேவையற்றது என்கின்றார் வில்ஸ்!

தமிழீழம் இலங்கைக்கு அவசியமில்லை என்றும், தமிழ் மக்களுக்கும் அது தேவையற்றது என்றும்- இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷலி வில்ஸ கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிதான் முதன்முதலில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்தார். நாங்கள் அந்தப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு கொடுத்து வருகிறோம். விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்திலிருந்து மெல்ல மெல்ல மீண்டுவருகின்றனர். இருந்தபோதிலும், போர் நிறுத்த (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



எங்களுக்கு எது தேவையெண்டு தீர்மானிக்கிறது நாங்கள்தான், நீங்களில்லை கண்டியளோ!

## ஈழ அகதிகளை திருப்பி அழைக்குமாறு ஜனாதிபதியிடம் ஜெயலலிதா கோரிக்கை



(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அதிகளை விரைவில் திரும்ப அழைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், இந்தியாவுககும் இலங்கைக்கும் இடையேயுள்ள கடற்பகுதியில் மீன்பிடிபபதில் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைய வேண்டுமெனவும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE (சி-730)
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128

# விவசாயிகளின் உற்பத்திகள் ஏற்றுமதிசெய்ய நடவடிக்கை

## யாழ். வந்த அமைச்சர் பந்துல உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழம், வெங்காயம், புகையிலை என்பவற்றை கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று - கடந்த சனிக்கிழமை யாழ்.வந்த பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நல்லூர் கமநல சேவைகள் திணைக்களத்தில் விவசாயிகளைச் சந்தித்து அவர்களது குறைநிறைகளைக் கேட்டபோது, தமது உள்ளூர் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் பெரும் இன்னல்கள் நிலவுவதாக விவசாயிகள் தெரிவித்தனர். அதற்குப் பதிலளித்தபோது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு - யாழ்.மாவட்டத்தில் புனரமைக்கப்படாதுள்ள குளங்களும் புனரமைத்துத் தரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்காக, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் தான் கலந்துரையாடியுள்ளதாகவும், அவர்கள் பெரிதும் உதவுவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தொிவித்தார். (சு)



# ரோக்கியோ மாநாட்டில் 40 நாடுகள் பங்குபற்றும்!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

ஜப்பானின் ரோக்கியோ நகரில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், 40 நாடுகள் பங்குபற்றவிருப்பதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்த மாநாட்டுக்கு நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியன கூட்டாகத் தலைமைதாங்கும் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இந்த மாநாட்டுக்கு முன்னோடியாக, இம்மாதம் 14 ஆம் திகதி வொஷிங்ரனில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, உள்ளிட்ட 36 நாடுகள் கலந்துகொள்ளவிருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# கழகங்களுக்கிடையேயான விளையாட்டு விழா நிகழ்வு

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தின் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுவிழா, கடந்த சனிக்கிழமை ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழா, உதவிப் பிரதேச செயலர் க.பீதாம்பரம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ். ஜே. ரூபசிங்க உரையாற்றுகையில் - ஒரு மனிதனுக்குக் கல்வி எவ்வளவு முக்கியமோ அதேபோன்று விளையாட்டும் தேவை எனவும், வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணத்துவம் அடைவதுபோன்று, சிறந்த பயிற்சி எடுப்பதாலும் மிக உயர்ந்த நிலையை அடையலாம் எனவும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில், சிறந்த மெய்வல்லுநர் விருதை க.அனந்தன் பெற்றுக் கொண்டார்.

முதலாம் இடத்தை மல்லாகம் ஆர்.டி.எஸ்.கழகமும், இரண்டாம் இடத்தைப் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (72)

## இரு பிரதேச செயலக நிரந்தரக் கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் புதிய கட்டட நிர்மாணத்துக்கு 75 இலட்சம் ரூபாவும், பருத்தித்துறை பிரதேச செயலர் பணிமனைக்கு ஒரு கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேசசெயலர் பணிமனைக்கும், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கும் கட்டடங்கள் அமைப்பது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (17)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு முள்ளிப் பகுதியில் வீடுகள்!

(சரசாலை)

மணியந்தோட்டம் - உதயபுரம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு, அரியாலை - முள்ளிப் பகுதியில் 100 வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒரு அறை மற்றும் சமையலறை, விறாந்தை, மலசலகூடம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக, ஒவ்வொரு வீடும் - 15,000 ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது என, இடமபெயர்ந்தோர் சங்கச் செயலாளர் சத்தியாம்பிள்ளை புலேந்திரனிடம் நல்லூர் பிரதேச செயலர், தெரிவித்துள்ளார். (34)

## தொண்டராசிரியர் அவசர கலந்துரையாடல்

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல், நாளை காலை 10.00 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

# உதிரிப்பாகங்கள் இல்லாமையால் காகித ஆலை மூடப்படும் நிலை!

உதிரிப்பாகங்கள் இல்லாத நிலையில் வாழைச்சேனை, கடதாசித் தொழிற்சாலை மூடப்படும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளது.

இலங்கைக்கான கடதாசித் தேவைகளில் 40 வீதத்தினைப் பூர்த்தி செய்யும் மேற்படி தொழிற்சாலைக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், பல வருடமாகக் கொள்வனவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு, தொழிற்சாலையின் மேலதிகாரிகளின் அக்கறையின்மையே காரணம் என அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - கடதாசித் தொழிற்சாலைக்கு வேண்டிய உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு, தொழிற்துறை அமைச்சு துரிதகதியில் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (01)

## இலக்கத் தகடுகள் விநியோகம்

கரவெட்டி பிரதேசசபை, உடுப்பிட்டி உப அலுவலகத்தில், 2003 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டுவருவதாக மேற்படி அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்தார். (116)


மலிவு விற்பனை

20% முதல் 50% வரை

புதுக்கணக்குப் போடவிருப்பதால்

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-753)

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஹையஸ் (Hiace - ருக்மணி) வான் விற்பனைக்கு உண்டு.

விடுமுறை நாட்கள் தவிர மற்றைய நாட்களில் காலை 9 - மாலை 5 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்பு:-

கோறல் டெஸ்டிபூட் இன்டஸ்றீஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-745)



திறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

விஜய்,ரீமா சென் நடித்த

பகவதி

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

BEST OF THE BEST

10.04.2003 முதல் Jurassic Park-3 (சி-731)



ராஜா யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந், பூமிகா, வீவேக், ராதிகா நடித்த

ரோஜாக்கூட்டம்

10.30, 2.30, 6.30

வெள்ளி, சனி, ஞாயிறு

இரவு 9.30 இற்கும் (சி-732)



நமது ஈழநாடு நடாத்தும்

க.பொ.த (உயர்தரம்) 2003

வர்த்தகப் பிரிவுக்கான

மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு

கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்

Best Bank in Srilanka

Institute of Informatics Studies

இலங்கை வங்கி

தேசத்தின் வங்கியாளர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Elephant house

Necto

அனுசரணையில்

ஆசிரியர் குழாம்

வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam

பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்

காலம்:- 11.04.2003

நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை

இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.


## இன்றைய நாள் இனிய நாள்

08-04-2003 - செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- குடும்ப மகிழ்ச்சி, அதிக பிரயாசம், வீண்பழி கேட்டல், பொருட்சேதம். |
| இடபம் | :- சத்துரு பீடை, தனவிருத்தி, பொருட்சேதம், தேகபல வீனம், வாகனநஷ்டம். |
| மிதுனம் | :- களஸ்திர சுகம், குடும்பனுகூலம், இனசன பிரிவு, வெளியூர் பிரயாணம். |
| கர்க்கடகம் | :- மனப்பயம், பிறருக்கு கீழ்படிதல், மனக்கவலை, இனசன விரோதம், பொதுசன மதிப்பு. |
| சிங்கம் | :- தேகமெலிவு, மனக்கவலை, களஸ்திர சுகம், அதிக செலவு, மனப்பயம். |
| கன்னி | :- பணவரவு, ரோக நிவர்த்தி, பூமிலாபம், மனக்கவலை, தொழில்கஷ்டம். |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- கோபமிகுதி, வாக்குக் கலகம், புதிய ஸ்தானம், இனசன விரோதம். |
| விருச்சிகம் | :- பொருட்செலவு, நிலைமாற்றம், கெட்ட செயலினால் அவமானம், பொருள் நஷ்டம், |
| தனு | :- அதிகாரசித்தி, குடும்ப மனஸ்தாபம், வியாதி, பிரயாண நஷ்டம், அலைச்சல். |
| மகரம் | :- நினைத்த காரியசித்தி, வாகனசுகம், நிலைப்பிரிவு, குடும்ப சுகம், புத்திரசுகம், |
| கும்பம் | :- காரிய விக்கினம், சரீரசுகக் குறைவு, வீண்முயற்சி பயனற்ற பிரயாசம், |
| மீனம் | :- உயர்ந்த நிலை, வாகன சுகம், சிநேக நன்மை, தன தானிய லாபம், குடும்பச் சிறப்பு. |

# ஆழ்கடல் கண்காணிப்புப் பணிக்கு கப்பல்கள், விமானங்கள் தேவை!

## அரசாங்கத்திடம் கடற்படை கோருகின்றது

ஆழ்கடல் கண்காணிப்புப் பணிகளில ஈடுபடுத்தக் கடற்படைக்கு மேலும் மூன்று பாரிய கண்காணிப்புக் கப்பல்கள் தேவைப்படுவதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அடுத்த வருடத்தில் கடற்படையின் கண்காணிப்பு நடவடிக்கைகளை விஸ்தரிப்புச் செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும், இதற்கு மேலதிக கப்பல்கள் தேவைப்படுவதாகவும் தெரியவருகிறது. தற்போது கடற்படையிடம் ஜெயசாகர, சயுர ஆகிய இரண்டு ஆழ்கடல் கண்காணிப்புக்கப்பல்கள் மட்டுமே உள்ளன.

இவை எதிர்காலத்தில் கடற்படையின் அதிகரித்த பணிகளுக்குப் போதுமானவையல்ல. அமெரிக்காவிடம் இருந்து 'கரேஜஸ்' என்ற கண்காணிப்புக் கப்பல் கிடைத்தாலும், அது கண்காணிப்புக்குப் போதுமானதல்ல என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - இந்தியாவிடம் இருந்து கண்காணிப்புக் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளிலும் கடற்படை ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அத்துடன், கடற்படைக்கெனத் தனியான விமானப்பிரிவு ஒன்று நிறுவவேண்டியதன் அவசியம் குறித்தும் கடற்படையினர் வலியுறுத்தி வருகின்றனர். விமானப்பிரிவு ஒன்று ஸ்தாபிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் பொ.ஐ.மு. அரசாங்கம் அதை நிராகரித்திருந்தது.

கடற்கண்காணிப்புப் பணிகளுக்கு ஆளில்லா வேவு விமானங்களும், கண்காணிப்பு விமானங்களும் தமக்குத் தேவையெனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'பீச் கிராப்ட்' தமது கண்காணிப்புக்கு உதவியாக இருப்பதாகத் தெரிவித்துள்ள கடற்படையினர், தம்மிடமுள்ள கப்பல்கள் சில அளவில் பெரியதாகவிருப்பதால் உரியவாறு பயன்படுத்திக்கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட சயுர கண்காணிப்புச் சபையின் வேகமும் போதாது என்றும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

## நாடும் நடப்பும்




# கப்பலைப் புலிகளே மூழ்கடித்தார்களாம்

## கூறுகிறார் கடற்படைத் தளபதி

கிழக்குக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கப்பட்டபோது, கப்பலின் அடியிலிருந்த நீரடி வால்வைப் புலிகள் திறந்துவிட்டதாகக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

இதனாலேயே கப்பல் கடலின் அடித்தளத்தில் மூழ்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கப்பல் மீது கடற்படையினர் போபர்ஸ் துப்பாக்கிகளாலேயே சுட்டனர். இந்தத் தாக்குதல் கப்பலை மூழ்கடிக்கப் போதுமானதல்ல என்றும், புலிகளே திட்டமிட்டுக் கப்பலை மூழ்கடித்ததாகவும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவித்தார்.

# சார்ஸ் நோயாளருக்குச் சிகிச்சை; முல்லேரியா மக்கள் கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

'சார்ஸ்' என்ற உயிர்கொல்லி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு முல்லேரியா தொற்றுநோய் வைத்தியசாலையில் வைத்துச் சிகிச்சையளிக்கப்படுவதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

உயிர்கொல்லி நோய் தாக்கியவர்களை எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளுமில்லாமல் முல்லேரியா தொற்று நோய் வைத்தியசாலையில் வைத்துச் சிகிச்சையளிக்கப்படுவதால், தமக்கும் நோய் பரவலாம் என இப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இவ்வைத்தியசாலையில் இதுவரை பிலிப்பைன்ஸ் பெண் ஒருவரும், ஜப்பானியர் ஒருவரும் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர். ஆனால், சில மணி நேரங்களிலேயே இவ்விருவரும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

தொடர்ந்தும் இந்த வைத்தியசாலையில் 'சார்ஸ்' நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கப்படுமானால், தாம் எதிர் நடவடிக்கையில் இறங்க வேண்டியேற்படும் என்றும் முல்லேரியா மக்கள் தெரிவித்துள்ளனர்.

## பேச்சுக்களுக்கு கருணாநிதி வரவேற்பு

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தனிப்பட்ட ரீதியில் சமாதானப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதைத் தாம் விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பலப்படுத்தப்பட்டு வரும் கறுத்தப்பாலம் முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி - பதுளை வீதியிலுள்ள கறுத்தப்பாலம் இராணுவ முகாமைப் பலப்படுத்தும் வேலைகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன. இப்பலப்படுத்தலினால் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் இராணுவமுகாமாக மாற்றப்பட்டுவருகின்றது.

பொதுமக்களுக்குச் சொந்தமான தென்னந்தோப்புக்களும், இராணுவ முகாம்களுக்குள் செல்வதால்- அதற்கருகிலுள்ள பொதுமக்கள் பெரும் அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளும் இராணுவ முகாமுக்குள் உள்ளடக்கப்பட்டுக் கொண்டிருப்பது பெரும் கவலையாகவுள்ளதாகப் பொதுமக்கள் மேலும் தெரிவித்தனர்.

இராணுவமுகாமை விஸ்தரிப்பதற்குப் புல்டோசர்களைக் கொண்டு மணல் மேடுகளும், முகாமைச்சுற்றி பங்கர்களும் அமைக்கப்படுவதாகப் பொதுமக்கள் புகார் செய்துள்ளனர்.

இதேவேளை - இந்த முகாமருகில் இந்து ஆலயமொன்று இருப்பதால், அவ்வாலயத்திற்குச் செல்வதற்கு மக்கள் அச்சமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (க)



மட்டு. கறுத்தப்பாலம் இராணுவ முகாம் சுற்றாடலில் முட்கம்பி வேலி இடப்பட்ட இந்து ஆலயத்தை முதலாவது படத்திலும் முகாம் அமைப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட புல்டோசர் வாகனத்தை இராண்டாவது படத்திலும் காணலாம்.

# ஜனாதிபதியின் குற்றச்சாட்டு தொடர்பாக நீதி விசாரணை நடத்த உத்தரவிடுக!

## விமானத்தள அதிகாரி நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தம்மீது ஜனாதிபதி சந்திரிகா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, நீதி விசாரணை நடத்தும்படி - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி கட்டுநாயக்க விமான நிலைய, விமான சேவைகள் பணிப்பாளர் காமினி அபேரட்ன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

பேச்சுக்களில் கலந்துகொள்ளாத புலிகளின் உறுப்பினர்களான பூவண்ணன், எமில் ஆகியோருக்குத் தாய்லாந்து செல்வதற்கான பயண ஒழுங்குகளைச் செய்து கொடுத்ததாகவும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்க இடமளித்ததாகவும், புலிகள் கொண்டுவந்த 36 பொதிகளைச் சோதனையின்றி எடுத்துச்செல்ல அனுமதித்ததாகவும், விமான நிலையப் பணிப்பாளர் காமினி அபேரட்ன மீது ஜனாதிபதி குற்றஞ்சாட்டியிருந்தார்.

அத்துடன், இவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டு நீதி விசாரணைகளை நடத்துமாறும் பாதுகாப்பு அமைச்சரிடம் ஜனாதிபதி கேட்டிருந்தார்.

ஆனால், ஜனாதிபதியின் இந்த உத்தரவைப் பாதுகாப்பு அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகவே நீதி விசாரணைகளை மேற்கொண்டு, உண்மை நிலையைத் தெளிவுபடுத்தப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுககு உத்தரவிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில், தான்- விமான நிலையப் பணிப்பாளர் என்ற வகையில் சட்டபூர்வமான பணிகளையே மேற்கொண்டதாகவும் காமினி அபேரட்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# புலிகளின் நடமாட்டம் பற்றி ஆராய ரெலவ்சன் திருமலைக்கு விரைவு!

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் இன்று திருகோணமலைக்கு விஜயம்செய்து, விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடவிருப்பதாகக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

ஆயுதந்தாங்கிய விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தொடர்பாக ஆராயவே ஜெனரல் ரெலவ்சன் திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரவுநேரங்களில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதாகக் கிழக்குப் பகுதிப் படையினர் கண்காணிப்புக்குழுவிடம் புகார் செய்திருந்தனர். கடந்த சனிக்கிழமை இரவு திருமலை பச்சனூர் பிரதேசத்தில் புலிகளின் நடமாட்டம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

500 புலிகள் இயக்க உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை இரவு சம்பூருக்குச் சென்றதாகவும், இதன்போது வீதிப்போக்குவரத்து நிறுத்தப்பட்டதாகவும் படையினர் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்தனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரித்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவே ஜெனரல் ரெலவ்சன் திருகோணமலைக்கு விஜயம் செயயவுள்ளார்.

# அகதிகள் திரும்பிய படகில் வெடி பொருட்கள் மீட்பு!

தமிழகத்திலிருந்து அகதிகளை ஏற்றிவந்த இந்திய மீன்பிடிப்படகு ஒன்றிலிருந்து பொலிஸார் பெருமளவு வெடிபொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மண்டபம் அகதிமுகாமில் தங்கியிருந்த அகதிகள் 23 பேரை ஏற்றிக்கொண்டு தலைமன்னாருக்கு வந்த படகிலேயே ஜெலிக்னைட் வெடி பொருட்கள் பெருமளவில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைத் தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விபத்துக்களைக் குறைக்க காவற்துறை அறிவுறுத்தல்!

அண்மைக்காலத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. அதைத் தடுத்துநிறுத்தி, எமது மக்களின் உயிரையும், உடமையையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எமக்குள்ளது எனத் தமிழீழக் காவற்துறை நகரப் போக்குவரத்துப் பிரிவு விடுத்துள்ள 'வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வோம்' என்ற செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்போதைய சூழலில், ஏ-9 பாதையில் சிறியரக வாகனங்கள் தொடக்கம் கனரக வாகனங்கள் வரை தினமும் பயணம் செய்கின்றன. இவ்வாகனங்களின் எண்ணிக்கை, வேகம் எனபவற்றிற்கேற்ப ஏ-9 பாதை இன்னமும் செப்பனிடப்படவில்லை. அத்துடன், வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்களும், ஏனைய பிரதேசங்களிலிருந்து வரும் மக்களுமாக பெரும் எண்ணிக்கையானோர் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் பயணம் செய்கின்றனர்.

அத்துடன், ஏ-9 பாதையில் பல பாடசாலைகளும் இயங்குகின்றன. பல நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும் இப்பாதையைத் தினமும் பாவிக்கின்றனர். இவ்வாறான சூழலில் அண்மைக்காலத்தில் பல வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இதில் எமது மக்கள் பலரின் உயிரும் பலிகொள்ளப்பட்டுள்ளது. பலர் காயமடைந்தும் உள்ளனர். சொத்திழப்புக்களும் ஏற்பட்டுள்ளது. இதில் குறிப்பாக, பாடசாலை மாணவர்களும், வயோதிபர்களும் அடங்குகின்றனர்.

இவ்வீதி விபத்துக்களை முற்றாகத் தடுத்து நிறுத்தி, எமது மக்களின் உயிரையும், உடமையையும் பாதுகாக்கும் பாரியபொறுப்பு எமக்குள்ளது. எனவே, பின்வரும் வழிகளில் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கி, வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

* துவிச்சக்கரவண்டிகளில் செல்லும்போது, பக்கம் பக்கமாகச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
* துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்களில் செல்லும்போது- பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டு, முன்னால் வாகனங்கள் செலுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
* சிறுவீதிகள், ஒழுங்கைகளில் இருந்து பிரதான வீதிக்கு வரும் போது, உங்கள் வாகனங்களின் வேகத்தைக் குறைத்துப் பிரதான வீதியின் இரு பக்கங்களையும் அவதானித்த பின்னர், பிரதான பாதையின் வலது பக்கம் வரும் வாகனங்கள் சென்ற பின் பிரதான பாதைக்குள் பிரவேசியுங்கள்.
* உங்களின் முன்னால் செல்லும் வாகனங்களை முந்திச்செல்ல வேண்டுமாயின், அவசரப்படாமல் போதிய இடவசதி ஏற்படும்போது மட்டும் முந்திச்செல்லவும்.
* வேகத்தடுப்பு இல்லாத வாகனங்களை எடுத்துச்செல்வதை முற்றாகத் தவிர்க்கவும்.
* மதுபோதையில் வாகனம் செலுத்துவதை முற்றாகத் தவிர்க்கவும்.
* பாதைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வேக அளவிற்கு அதிகமாக வாகனங்களைச் செலுத்தவேண்டாம்.
* பாடசாலைப் பிள்ளைகள் வீதிகளைக் கடக்கும்போது, உங்கள் வாகனங்களை நிறுத்தி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துச்செல்லவும்.
* இரவு நேரங்களில் உங்கள் வாகனங்களின் பிரதான வெளிச்சம் பாய்ச்சிகள் (ஹெட் லைட்) இரண்டின் செயற்பாட்டில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டும் இல்லாது பயணம் செய்தல் வேண்டாம்.
* எதிரே வரும் வாகனத்திற்கு மங்கல் வெளிச்சத்தை (டிம்) மாற்றிச் செல்லவும்.

மேற்கூறிய விடயங்களைச் சரியான முறையில் கடைப்பிடித்து எமது மக்களின் உயிரையும், உடமைகளையும் பாதுகாப்போம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கரணவாயில் திருவள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக்கழகம் நடத்தும் 17 ஆவது திருவள்ளுவர் விழா, கருணையம்பதி சனசமூக நிலைய முன்றலில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும்.

இவ்விழாவில் பாடசாலை மாணவர்களுக்குப் பேச்சு, திருக்குறள் மனனப் போட்டிகள், தமிழ் அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள், இசைநிகழ்ச்சி, பட்டிமன்றம், வழக்காடுமன்றம், நாடகம் ஆகியவை இடம்பெறுமெனவும் விழா அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (116)

### வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இவ்வுற்சவம் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்றுத் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.(72)

### கரவெட்டியில் திருத்தல வழிபாடுகள்

(கரவெட்டி)

கரவெட்டி அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வியாகுலமாதா திருத்தலத்தில் 6 ஆம் வெள்ளி வழிபாடுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை - கரவெட்டி பங்குத்தந்தை அன்ரனி அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இத்திருத்தல 'வழிபாடுகளை யாழ். ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சௌவுந்தரநாயகம் ஆண்டகை நடத்துவார். அன்று அதிகாலை 6 மணிக்குக் கூட்டுப் பலிப் பூசையும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஆயத்த வழிபாடுகள் நடைபெறும். (17)

### ஈழவேந்தனின் கருத்துரைகள்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு 'எமது எதிர்காலம்' என்ற தலைப்பில் மா.க.ஈழவேந்தன் கருத்துரை வழங்கவுள்ளார். இந்நிகழ்வுக்குக் கல்லூரி முதல்வர் திருமதி. இராசரத்தினம் தலைமை தாங்குவார்.

நாளை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் 'வைத்தீஸ்வராக் கல்லூரியில் 'புரிந்துணர்வு ஒப்பந்தம் புரிய வைக்கும் உண்மைகள்' என்ற தலைப்பிலும் அவர் உரைநிகழ்த்தவுள்ளார்.

### மானிப்பாயில் தேசிய பாடசாலைக்கு முயற்சி

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றை இணைத்துத் தேசிய கல்லூரியாக நிறுவ - இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சகல ஏற்பாடுகளையும் எடுத்துவருவதாகத் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். (46)

## மோட்டார் சைக்கிளில் சென்றவரை காரில் வந்தவர்கள் தாக்கினர்!

ஆஸ்பத்திரி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரைப் பின்தொடர்ந்து, காரில் வந்தவர்கள் அவரைத் தலையில் பலமாகத் தாக்கிவிட்டுத் தலைமறைவாகிவிட்டனர். இதனால், தலையில் படுகாயமடைந்தநிலையில் மேற்படி நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் - நெல்லியடியைச் சேர்ந்த நமசிவாயம் பரமசிவம் (வயது 27) என்பவரே தலையில் படுகாயமடைந்தநிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சு)

## பூநகரியில் அமோக நெல்விளைச்சல் விற்கமுடியாமல் விவசாயிகள்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரிப் பகுதியில் இம்முறை அமோக நெல் விளைச்சல் கிடைத்துள்ளபோதும், நெல்லை விற்பனை செய்யமுடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி - பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நிதிப் பற்றாக்குறையெனக் கைவிரித்துவிட்டன. இதனால், விவசாயிகள் பெரும் கஷ்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி நலன் காக்கும் அமைப்பின் தலைவர் என்.பத்மநாதன் இது சம்பந்தமாகக் கிளிநொச்சி - பூநகரி ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன மற்றும் கூட்டுறவு நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (17)

## புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவுக்கு மேலதிக ரயில்

புத்தாண்டை முன்னிட்டு ரயில்வே திணைக்களம் வவுனியாவிற்கு மேலதிகமாக இரண்டு ரயில் சேவைகளை நடாத்தி வருகிறது.

நேற்றுமுதல் எதிர்வரும் 13 ஆம் திகதிவரையும் பின்னர் 20 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதிவரையும் இம்மேலதிக சேவைகளை நடாத்த ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

நண்பகல் 12.15 மணிக்குக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு, முன்னிரவு 7.05 மணிக்கு வவுனியாவை வந்தடையும். மற்றைய சேவை காலை 7.40 மணிக்கு வவுனியாவிலிருந்து புறப்பட்டு, பிற்பகல் 3.05 மணிக்குக் கொழும்பு புறக்கோட்டையை சென்றடையும் எனப் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. புதுவருடத்தை முன்னிட்டு ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்தவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (03)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்

பெயர் :சி.மதுஷாந்தன்
முகவரி:C.V. றோட், திருகோணமலை.



மூன்றாவது அகவையில்



பெயர் :ஜெ.அபிநயா (ஜேர்மனி)
முகவரி:12 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

ஆறாவது அகவையில்

பெயர் :தெ.சுமங்கலா
முகவரி:சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி.



எட்டாவது அகவையில்



பெயர் :இ.ஹம்சலா
முகவரி: மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

எட்டாவது அகவையில்

பெயர் :ஸ்ரீ.சொரூபிகா
முகவரி: ஸ்ரீ முருகன் களஞ்சியம், வட்டுக்கோட்டை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------
முகவரி :-----------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------------
பெற்றார் ஒப்பம்

# ரோபோக் கண்காட்சி



இவ்வாண்டு யப்பான் யோக்கோஹாமா நகரில் மிகப்பெரிய ரோபோக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இதில் முக்கிய பாத்திரமாக விளங்கவுள்ள ரோபோ மனிதன் ஹொண்டா நிறுவனத்தின் சுசிமோவாகும்.



IF BOT - நாற்பது வகையான முகபாவனைகள் காட்டக்கூடியது. ஆயிரம் வார்த்தைகள் பேசக்கூடியது.




WE-4R ரக ரோபோ - மகிழ்ச்சி, கோபம், வியப்பு, திருப்தியின்மை, சோகம், அச்சம் ஆகிய ஆறுவகையான முகபாவங்களைத் தெளிவாகக் காட்டுவது.




வீட்டு உபயோகத்திற்கான குரல்வழியே கட்டளைகளுடன் செயற்படும் ரொஷிபாவின் அப்ரி அல்பா ரோபோ.




# திமிங்கில வேட்டையை ஐஸ்லாந்து ஆரம்பிக்கிறது



ஐஸ்லாந்து 13 வருடங்களின் பின்னர் மீண்டும் திமிங்கில வேட்டையை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது. வர்த்தக நோக்கோடு அல்ல, ஆய்வுகளுக்காகவே இவ் வேட்டையை நடாத்தவுள்ளதாக





அந்நாடு தெரிவித்துள்ளது.

ஜப்பானும் திமிங்கல வேட்டையை விஞ்ஞான ஆய்வுக்காகவே நடாத்துவதாகத் தெரிவித்து வருகிறது. நோர்வே மட்டுமே வெளிப்படையாகப் பொருளாதார நோக்கில் திமிங்கல வேட்டை நடத்துவதாகக் கூறிவருகிறது.

கடற்சூழலில் திமிங்கலங்களின் வாழ்வியலை ஆராயும் பொருட்டே வேட்டையை ஆரம்பிக்கவுள்ளதாக ஐஸ்லாந்து மீன்பிடித்துறை அமைச்சர் ஆர்னி மத்தீசன் கூறுகிறார்.

1986 இல் பொருளாதார ரீதியான திமிங்கல வேட்டை - சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மட்டும் ஜப்பான் ஆய்வுக்கான வேட்டை என்ற பெயரில் 700 திமிங்கலங்களை வேட்டையாடியுள்ளது.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## அங்கம் - 04

## கிரிஃபித்



ஃபிளாஷ் பக் முறையைப் பார்வையாளர்கள் ஒப்புக்கொண்டனர் என்பது புரிந்தவுடன், ஒரேசமயத்தில் பல்வேறு இடங்களில் நிகழும் சம்பவங்களை, ஒரேகாட்சியில் பயன்படுத்தினால் என்னவென்று நினைத்தார். அதன் விளைவாகப் பல்வேறு இடங்களில் நடைபெறும் காட்சிகள் எவ்வாறு கதைக்கு வலுச்சேர்க்கின்றன என்பதை மற்றொரு படத்தில் பரிசோதனை செய்து பார்க்கிறார்.

குடும்பத்தைவிட்டுப் பிரிந்து வெகுதொலைவில் வாழும் கதாநாயகன்- கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்பித்து ஓடி வருகிறான். தன்னுடைய குடும்பம் கொள்ளைக்காரர்களால் தாக்கப்படாமல் தடுக்கும் நோக்கத்துடன் விரைந்து ஓடி வருகிறான். அவன் நினைத்ததுபோல் குடும்பம் கொள்ளைக்காரர்களிடம் சிக்கித் தவிக்கிறது. இறுதியாகக் கதாநாயகன் குறிப்பிட்ட நேரத்தில் வீட்டுக்கு வந்து சேர்கிறான். இதில் இடம்பெற்றுள்ள ஷொட்கள் பல்வேறு இடங்களிலுள்ள சம்பவங்களை வெளிப்படுத்துகின்றது. இதுவும் வெற்றிகரமான பரிசோதனை ஆகிறது. பார்வையாளர்கள் மத்தியில் பரபரப்பும், தீவிரமான பதைபதைப்பு உணர்வுகளையும் ஏற்படுத்த இந்தக்காட்சிகள் பெருமளவு உதவின.

சினிமாவின் அடிப்படை இலக்கணங்கள் எல்லாமே கிரிஃபித்தால் மறுபரிசீலனை செய்யப்பட்டுப் புதுவடிவம் பெற்றன. பார்வையாளர்கள் கிரிஃபித்துக்கு முந்தைய படங்களை வெறும் வேடிக்கையாளராகவிருந்து மட்டுமே பார்த்து ரசித்தனர்.

ஆனால், கிரிஃபித்தின் படங்கள் பார்வையாளர்கள் மத்தியில் நேரடியாகவே காட்சியில் ஈடுபடும் ஓர் உணர்வைத் தோற்றுவித்தன. எனவே, திரையுலக வரலாற்றில் கிரிஃபித் முழுமையான, கலைத் பிரக்ஞையுள்ள இயக்குநராக நிமிர்ந்து நிற்கிறார்.

கிரிஃபித்தின் பரிசோதனை முயற்சிகள்தான் இன்றைய சினிமாவின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு வலிமையான அடித்தளம் என்றும் கூறலாம்.

'பேர்த் ஒவ் எ நேஷன்' படத்திற்குப் பிறகு அதேபோன்ற கலைத் தன்மை, உட்பொருள், திரைநுட்பம், தெளிவான கதை மற்றும் சம்பவங்களுடன் ஏராளமான படங்கள் வெளியாகின. சினிமாத் தயாரிப்பில் முதல்முதலாகக் கலைத்தன்மை + வியாபாரக் கவர்ச்சி + வெற்றி உத்தரவாதம் என்ற மூன்றும் கிரிஃபித்துக்குப் பிறகே படியத்தொடங்கின.

திரைப்படத்துறையில் அன்றைய தனது நடைமுறைகள் புரட்சிகரமானவை என்று கிரிஃபித் உணர்ந்திருந்தார் என்று கூறமுடியாது.



புறோக்கின் புளோசம் படத்திலிருந்து ஒரு காட்சி.

நாவல், நாடகம் போன்று வாழ்க்கையை உள்வாங்கி வெளிப்படுத்தச் சினிமாவாலும் முடியும் என்பதுதான் கிரிஃபித் நிரூபித்த மிகப்பெரிய விஷயம். கிரிஃபித்தின் தாய்வழியினர்- 'விக்டோரியன் கால' எழுத்தாளர்களாக விளங்கியவர்கள்.



அந்த இலக்கிய வாசனைதான் கிரிஃபித்தைச் சினிமாவிலும் இலக்கியம் படைக்கத் தூண்டியது எனலாம்.

ஆரம்பகாலத் திரைப்படங்களில் லோங் ஷொட்டில் கமராவின் கோணம் மாற்றப்படாமல் தான் பெரும்பாலான காட்சிகள் படமாக்கப்பட்டன. ஒரு காட்சியைப் பல 'ஷொட்'களாகப் பிரித்துப் படமாக்குவதை முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் கிரிஃபித்துதான்.

ஷொட்களின் நீளங்களிலும் இவர் மாற்றங்களை ஏற்படுத்தினார். லோங் ஷொட்கள் மட்டுமன்றி மீடியம் ஷொட், க்ளோஸ்-அப் போன்றவற்றைக் கிரிஃபித் அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறார். எடிட்டிங்கின் பணி போர்ட்டரின் படங்களில் இடம்பெற்றிருந்தது.

எனினும், காட்சிகளின் நடுவே ஃபிலிமை வெட்டி ஒட்டுவது அன்று பழக்கத்தில் இல்லாமல் இருந்தது. தலைமுதல் பாதம்வரை ஃபிரேமில் தெரியவேண்டும் என்பதும் ஒரு வழக்கமாகக் கையாளப் பட்டுவந்தது.

கிரிஃபித் இந்த வழக்கங்களையெல்லாம் பொருட்படுத்தாமல், தான் விரும்பியபடியே அந்த விதி மீறல்களைத் தனது படங்களில் புகுத்தினார்.

முதன்முதலாக ஒரு நடிகரின் முகத்தைக் குளோஸ்-அப் காட்சிமூலம் திரையில் மிகப்பெரியதாகக் காண்பித்த பொழுது பார்வையாளர்கள் பிரமித்தனர்.

1908 இல் தயாரான ஆஃப்ரர் மெனி இயர்ஸ் (After many Years) படத்தில்தான் ஷொட் பிரிக்கும் முறையை கிரிஃபித் முதன்முதலாகப் பயன்படுத்தியுள்ளார்.

(தொடரும்)

# அல்-ஜெசீரா இணையத்தளம் திட்டமிட்டு குழப்பியடிப்பு



அரபு செய்தி நிறுவனமான அல்-ஜெசீராவின் ஆங்கிலமொழி இணையத்தளத்துக்கு ஈராக் போரினால் புதிய பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளது. இந்த இணையத் தளத்தைத் தற்போது மிகச்சுலபமாகச் சில விஷமிகள் குழப்பி வருகின்றனர்.

இதற்குக் காரணம் - இந்நிறுவனம் ஒளி பரப்பிய ஒரு காட்சியே. அண்மையில் ஈராக்கியப் படைகளால் பிடிக்கப்பட்ட அமெரிக்கப் போர்க்கைதிகளை, அல்-ஜெசீரா நிறுவனம் படம் பிடித்து உலகம் முழுவதும் ஒளிபரப்பியது. இதனால், சீற்றமுற்ற அமெரிக்க நிறுவமான அகாமி தொழில்நுட்ப அமைப்பு - அல்-ஜெசீரா இணையத்தளத்தை எவரும் குழப்பிவிடாதபடி தடுக்கும் தனது தொழில்நுட்ப உதவியை நிறுத்திக்கொண்டது. இதனால், தற்போது அல்-ஜெசீராவின் இணையத்தளம் பாதுகாப்பற்றதாகி, அனைவராலும் குழப்பியடிக்கக்கூடிய ஓர் இணையத்தளமாகிவிட்டது. தன்னால் வாடகைக்கு அமர்த்தப்பட்டபோதிலும், அரசியற் காரணங்களினால்தான் அகாமி நிறுவனம் இந்த முடிவை மேற்கொண்டதாக அல்-ஜெசீரா நிறுவனம் குற்றஞ்சாட்டுகிறது. இது குறித்து, அகாமி நிறுவனம் கருத்துக் கூற மறுத்துவிட்டது. கட்டாரை தலைமையகமாகக்கொண்ட அல்-ஜெசீரா இணையத்தளத்துக்குப் போட்டியாக பி.பி.ஸி, சி.என்.என், ஸ்கை போன்ற மேற்கத்தைய இணையத்தளங்கள் வளைகுடாப் போர்ச் செய்திகளைத் தற்போது வெளியிட்டு வருகின்றன.

# வாரம் ஒரு யோகாசனம்

## மத்ஸ்யாசனம்



பத்மாசனத்தில் அமர்ந்து முதுகுப் பக்கமாகச் சாய்ந்து, தலையை வளைத்துத் தரையில் பதிய வைக்கவும். இடுப்பை முடிந்தவரை மேற்பக்கம் உயர்த்தவும். முழங்கைகளும் நிலத்தில் படிய, கையால் இரண்டு பாதங்களையும் பிடிக்கவும். இந்த ஆசனத்தை 2 முதல் 5 நிமிடம் வரை செய்யலாம்.

**மத்ஸ்யாசனத்தின் நன்மைகள்**

பல நோய்களையும் தீர்க்கவல்லது.

கற்றுத்தருபவர் – **மா.மகாநேசன்** (கரவெட்டி)

# திரை விமர்சனம்

## ஆசை ஆசையாய்



பிரபல தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரியின் மகன் ஜீவாவுக்கு இது அறிமுகப்படம். செஞ்சரி அடிக்க வில்லை என்றாலும், நொட் அவுட் பட்ஸ்மேனாக நிமிர்ந்து நிற்கிறார். இயல்பான நடிப்பு வருகிறது. தொலைக்காட்சிப் புகழ் ஷர்மிலிக்கும் இது முதல் படம். சந்தேகமில்லை, நிச்சயம் அழகான புதுமுகம். நடிப்பும் வருகிறது என்பது கூடுதல் தகைமை.

புதுமுகங்கள் நடிக்கிறார்களே என்கிற பயம் காரணமாகவோ என்னவோ, இடைவேளை வரை இரட்டை அர்த்த வசனங்களை அநியாயத்துக்குத் தூவி விட்டிருக்கிறார் இயக்குநர்.

ஓடிப்போன அக்கா. அதனால், நெஞ்சைப் பிடித்துக்கொண்டு மாரடைப்பினால் விழும் அப்பா. அவருக்காகத் தன் காதலைத் தியாகம் செய்யும் நாயகி. சொல்லி வைத்தாற்போல் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டுத் திரும்பிவரும் அக்கா. அப்பாவின் படிப்புக் கனவை நனவாக்கும் நாயகி. அதேபோல், உருப்படாத பையனாக இருந்து, வாழ்க்கையில் முன்னேறும் ஹீரோ. இதுதான் கதை.

இயக்குநர்களுக்கு ஒருவேண்டுகோள். கதாநாயகன் எப்படி வேண்டுமானாலும் கஷ்ரப்பட்டு முன்னேறிவிட்டுப் போகட்டும். ஆனால், அதை ஒரேயொரு பாடல் காட்சியில் பங்களாக்கள் கட்டி விடுவதுபோல் காட்டுவதைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள். ரசிகர்கள் கேலிசெய்கிறார்கள்.

காதலைச் சொல்லிக்கொண்ட பின்பு, வீட்டுச் சூழ்நிலை கருதி இருவரும் இப்போது கல்யாணம் வேண்டாம் என்று முடிவெடுப்பது யதார்த்தமான திருப்பம்.

காக்கா ராதாகிருஷ்ணனின் நகைச்சுவை தலைவலிக்கான இலவச இணைப்பு. மகனின் வியாபாரத்துக்கான முதலீடாக தபாற்காரரான அப்பா விஜயகுமார் சுயமாக வேலையை விடுவது நெகிழ வைக்கும் காட்சி. அதேபோல், தன் மகள் என்ஜினியரிங் முடித்துப் பட்டம் வாங்கும்போது நாசர் உணர்ச்சிவசப்பட்டுக் கண்ணீர் விடுவதும் நெஞ்சைத் தொடுகிறது.

ஹீரோ என்பதற்காகக் கதையோடு சேராமல், இரண்டு சண்டைக் காட்சிகள் அபத்தம்.

ஜீவாவையும் ஷர்மிலியையும் வீடியோ எடுப்பவர் அதை கிளைமக்ஸ் காட்சியில்தான் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்கிறார். ஆர்.பி.சௌத்ரியின் படம் அலுப்புத்தட்டவில்லை என்பது மட்டுமே இதில் சிறப்பு.

# குழந்தைகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய பருவம்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

அதைவிடுத்து "நான் பெரிய ஆள், செய்யலாம், பிழைவிடலாம். நீ சின்னப் பிள்ளை, பிழைவிடக்கூடாது" என்று கூறினால் - நான் பெரியதாகியதும் பிழைவிடலாம் என்று பிள்ளை நினைக்கும். சில பெற்றோர், பிள்ளைகள் அப்படிக் கேட்கும் போது "வாய்மூடு. அப்பாவைத் திருத்தப் பார்க்கிறாயா?" என்று கூறுவர். இதுவும் பிழையே.



இவ்வாறு பெற்றோர் "இவ்வயதிலுள்ள பிள்ளைகள் ஒழுங்கில்லை" என்று குறைபட்டுக் கொள்ளுவர். அதனால் தண்டனை கொடுக்கவேண்டும். தண்டனை கொடுத்தால், ஒழுங்குள்ள பிள்ளையாக வளரும் என்பர். ஒழுங்கையும், தண்டனையையும் அடுத்த அதிகாரத்தில் நோக்குங்கள்.

ஒருவரது விவாக வாழ்வு நன்றாக அமைய வேண்டுமானால், சிறுபிள்ளைப் பருவத்தில் தனது அப்பா, அம்மாவுக்கு இடையில் நல்ல அன்புத்தொடர்பு இருப்பதைப் பிள்ளை அனுபவித்தால், வளர்ந்ததும் விவாக வாழ்வு சிறப்புறும். மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்பு செய்யப்பட்டு பாதுகாப்பு உணர்வை சிறுவயதில் அனுபவித்தால், வளர்ந்ததும் விவாகவாழ்வு சிறப்புறும். சிறுவயதில் தண்டனை அதிகமாகப் பெற்றவர்கள்- வளர்ந்தால் மற்றவர்களுக்கும் அவ்வாறு தண்டனை கொடுக்க முனைவர்.

மேலும், இந்த வயதிலுள்ள பிள்ளைகளுக்கு, எதிர்ப்பாலாரில் அதிக நெருக்கம் இருப்பதில்லை. ஐந்து வயதிலிருந்து ஆண்பிள்ளை அதிகமாக ஆண்பிள்ளையுடன் சேரவிரும்பும். அதனால் ஆணையே முன்மாதிரியாகக் கொள்ளவிரும்பும். பெண் பிள்ளை - பெண்ணையே முன்மாதிரியாகக் கொள்ள விரும்பும். பால்வேறுபாட்டின் அடையாளத்தை உறுதிப்படுத்த விரும்புவதால், எதிர்ப்பாலாரில் அதிகம் விருப்பம் வருவதில்லை. அவர்களைப் பெரும்பாலும் பிடிக்காது இருக்கும்.

ஒருநாள் நான் இந்த வயதிலேயுள்ள பிள்ளைகளுக்குப் பிரசங்கம் செய்யப் பாடசாலை ஒன்றுக்குச் சென்றிருந்தேன். முன்வரிசையில் ஆண்பிள்ளைகளும், பின்வரிசையில் பெண்பிள்ளைகளும் இருந்தனர். முன்வரிசையிலிருந்த ஆண்பிள்ளை ஒன்று திடீரென எழும்பி "சேர், இந்தப் பொம்பிளயளை அடிச்சு விரட்ட வேணும்" என்று கூறினார். ஏன் என்று கேட்டேன். பின்னால் எனக்குக் கிள்ளுதுகள் என்று கூறினான். "நாங்கள் கிள்ளவில்லை" என்று பெண்பிள்ளைகள் கூறினர். சிலநேரம் கிள்ளாமல் இருந்திருக்கலாம். கதிரை அங்கும் இங்கும் நெருக்கி இருக்கலாம். இந்த வயதில் ஆண்பிள்ளைகளுக்குப் பெண்பிள்ளைகளைக் கண்டால் எரிச்சல் வரலாம். இப்படிப்பட்ட குணம் எந்த நாளும் இருக்காது. கொண்டாட்டம், பெருநாள் வரும்போது ஆண்பிள்ளைகள்-பெண்பிள்ளைகளோடு சேர்ந்து செயற்படுவர்.

நடுத்தர வயது வருவதால் பாலுறுப்புப் பற்றி அறிய ஆசை ஏற்படும். ஆனால், உடலுறவுகொள்ள ஆசையிருப்பதில்லை. பாலுறுப்புக்களைப் பற்றிய புத்தகங்களைக் கண்டால் அதை அறிய, வாசிக்க ஆசைப்படுவர். பிள்ளைகளில் இப்படிப்பட்ட குணத்தைக் கண்டதும் நாம் கலவரப்பட்டவேண்டியதில்லை. அடிக்க வேண்டியதில்லை. காரணம்- பிள்ளை இதைச் செய்வது பாலுறுப்புப் பற்றி அறிய ஆசை இருப்பதாலேயே

பாலுறுப்புக்களை பற்றி நாம் பாவிக்க விரும்பாத வார்த்தைகளைப் பாவிக்க விரும்புவர். நண்பர்கள் ஒன்று கூடியதும் இதைப் பற்றிக் கதைப்பர். இது இயற்கையே. பாடசாலை செல்லும்போது ஒரு பிள்ளை வழியில் சிறுநீர் கழித்தால், ஒருவர் பின் ஒருவராக மற்றவர்களும் சிறுநீர் கழிப்பர். மற்றப் பிள்ளைகளுக்குச் சிறுநீர் கழிக்கவேண்டிய தேவை இல்லாதிருந்தாலும் அதைச் செய்வர். அதுமட்டுமல்ல சிறுநீர் கழித்தவாறு ஆணுறுப்பைப் பார்ப்பர். அளவு எப்படி என்று நோக்குவர். ஒப்பிட்டுப் பார்ப்பர். இதுவும் பாலுறுப்புப் பற்றிய உந்துதலின் வெளிப்பாடே.

ஒருநாள் ஒரு தாய் அழுதவண்ணம் என்னிடம் ஓடி வந்தாள். அவளது பிரச்சினை என்னவென்றால் நடுத்தர வயதில் இருக்கும் தனது மகன் - அடுத்த வீட்டுப் பிள்ளைக்குப் பாடசாலையில் வைத்து ஒரு கடதாசி கொடுத்தானாம். அக்கடதாசியில் உனது பெண்ணுறுப்பைக் கீறித் தருமாறு அடுத்த வீட்டுப் பிள்ளையிடம் கொடுத்தானாம். அப்பிள்ளை கடதாசியைக்கொண்டு சென்று தனது தாயிடம் கூறியதாம். அத்தாய் இந்த ஆண்பிள்ளையின் தாயிடம் கூறிவிட்டாள். தாய் அப்பிள்ளைக்கு நன்றாக அடித்தாள். பின்பு தந்தை வீட்டுக்கு வந்ததும் தந்தையிடமும் கூறினாள். தந்தையும் பிள்ளைக்கு நன்றாக அடித்துவிட்டார். இன்னும் திருப்திப்படாத தாயார் மறுநாள் என்னிடம் வந்து இதைக் கூறினாள். "எனது மகன் கெட்டுவிட்டான். எங்கள் பரம்பரையிலேயே இப்படி ஒரு பிள்ளை இல்லை. எனது மனதிலிருந்து மகனை அப்புறப்படுத்தவும் தீர்மானம் எடுத்து விட்டேன்" என்றாள். அவளை ஒருவாறு தேற்றிவிட்டு, இந்த வயதிலுள்ள பிள்ளைகளின் மனநிலையை அவளுக்கு நான் விளக்கினேன். அதன்பின்பே தனது பிள்ளை கெட்ட பிள்ளையில்லை. இயற்கையாக இந்த வயதில் வரும் மனநிலைப்படி செயற்பட்டுள்ளது என்பதை அத்தாய் உணர்ந்துகொண்டாள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பிள்ளையை அடிக்காது பிள்ளையை அணைத்துச் சொல்லிக்கொடுத்தல் வேண்டும். மகன் இது இயற்கைதான். இதைப்பற்றி ஒவ்வொருவரிடமும் கேட்கப் போனால் பிரச்சினை வரும். இதைப்பற்றி அறிய வேண்டுமானால் என்னிடம் கேளுங்கள். நான் இதைப்பற்றிய விளக்கப்படங்களுடன் உள்ள புத்தகத்தில் விளக்குகிறேன் என்று கூறியிருக்கலாம். அப்படிக் கூறியிருந்தால் பாலுறுப்பு இயற்கையானது. நல்லது என்று எண்ணும். அப்படிச் செயற்படாது அப்பிள்ளைக்கு அடித்தால் - அன்றிலிருந்து பாலுறுப்பு என்பது பேசக்கூடாதது போன்றது என அப்பிள்ளை எண்ணத்தொடங்கும்.

- எஸ்.ஜே. யோகராஜா

(தொடரும்....)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

- *திருக்குறள்*

## நமது நோக்கு

### கொழும்பு அரசியல் !

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னதாக - இலங்கை அரசியலில் முக்கிய திருப்பங்களை ஏற்படுத்திவிட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளன.

இவற்றில் - இந்தவாரம் இரண்டு தரப்புமே முக்கிய நகர்வுகளை மேற்கொண்டிருப்பதை அரசியல் அவதானிகள் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமைதி முயற்சிகளின் போக்கில் - இன்னமும் அரசியல் விவகாரங்கள் தொடர்பான விரிவான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாத நிலையில் - மக்களது அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு உரியதொரு தீர்வு காணப்படாதபோது - அமைதி முயற்சிகள் தொடர்பாகவும், அரசியற் தீர்வு பற்றியும் பொதுமக்கள் கருத்துக்கணிப்பொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் பீரிஸ் அறிவித்தார்.

அவர் அறிவித்த மாத்திரத்திலேயே விடுதலைப் புலிகள் இது பொருத்தமற்ற நடவடிக்கை என்பதனைத் தமது வலுவான எதிர்ப்பு மூலம் எடுத்துக் கூறிவிட்டனர்.

பொதுமக்கள் கருத்துக் கணிப்பொன்றை அவசர கதியில் நடத்தி - அதன்மூலமாக - தமது அரசாங்கத்திற்கு மக்களாதரவு இருக்கின்றது என்பதனையும் - அதன்மூலமாக, பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி. கூட்டணியால் தமது தளம் வலுவிழந்து போய்விடவில்லை என்பதனையும் வெளிக்காட்டுவதற்கு அரசாங்கத்தரப்பு முயற்சி செய்தது.

ஆனால் - இத்தகையதொரு மக்கள் கருத்துக் கணிப்பானது - போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு எந்தவொரு ஆதாயத்தையும் பெற்றுத் தந்துவிடப் போவதில்லை என்பதோடு - இடம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிமுகாம்களில் வாடவும், போரின் பாதிப்புக்கள் இன்னமும் களையப்படாதிருக்கவும் - சுமுக வாழ்வைத் தமிழ் மக்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதற்கே முடியாதிருக்கும் போது - சர்வஜன வாக்கெடுப்பொன்றை இப்போது வட-கிழக்கில் நடாத்துவது யதார்த்த பூர்வமானதுதானா என்ற நியாயமான கேள்விகளின் முன்னால் அரசாங்கத்தின் திட்டம் பலவீனப்பட்டுப்போய் நிற்கின்றது.

விடுதலைப் புலிகளின் ஆட்சேபம் - அரசாங்கத்தின் அவசரக்குடுக்கைத் தனத்தை வெளிப்படுத்த, இன்னமும் மக்கள் கருத்துக் கணிப்புக்கான இறுதி முடிவு மேற்கொள்ளப்படவில்லை என்றும் அதனை நடத்துவதற்கான திகதிகள் பற்றித் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அரசாங்கம், திட்டத்தை ஒத்திவைப்பதான நிலைக்கு வந்திருக்கிறது.

எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் எதுவாகிலும் செய்து - சர்வதேசத்தின் அனுதாபத்தை, ஆதரவைப் பெற்றுவிட வேண்டுமென அரசாங்கம் பெருமுயற்சி செய்வதை - விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும், சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவில் பங்கேற்பவருமான கேணல் கருணா தெளிவாகவே அடையாளம் காட்டியிருக்கிறார்.

மட்டக்களப்பிலிருந்து வெளியாகும் 'தமிழ் அலை' தினசரிப் பத்திரிகையின் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய அவர் - வெளிநாட்டு உதவிகளைப் பெறவே, அரசியற் தீர்வு பற்றிப் பேச அரசாங்கம் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவித்தார். அத்துடன், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயல்புநிலை ஏற்படுத்தப்படும்வரை, அரசியற்தீர்வு யோசனைகள் பற்றிய சமாதானப் பேச்சுக்கு இடமில்லை என அவர் உறுதிபடக் கூறினார்.

அரசாங்கத்தின் நகர்வுகள் இப்படியிருக்க -

ஜனாதிபதி சந்திரிகா - தனது நெருங்கிய ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் சகிதம் நேற்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடனான சந்திப்புடன் ஆரம்பமாகியிருக்கும் அவரது விஜயம் - பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் நகர்விலும், இந்தியாவின் சமாதானப் பேச்சுக்கள் பற்றிய நிலைப்பாட்டிலும் முக்கியமாகின்றது.

ஏற்கனவே ஒரு சில தினங்களுக்கு முன்னர் - இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவிற்குள்ள அக்கறையும், தலையீடும் பற்றி பிரதானமாகக் குறிப்பிட்டு - லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியின் அடிப்படையில் பார்க்கும்போது - ஜனாதிபதி சந்திரிகாவின் விஜயம் - அவரது தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படவிருக்கும் அரசியல் நகர்வுகளுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருப்பது புலனாகும்.

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன்பாக - ஜனாதிபதி சந்திரிகா - தனக்கு ஆதாயமான அரசியல் திருப்பமொன்றை ஏற்படுத்திவிட அக்கறை காட்டும்போது - அந்தத் திருப்பத்துக்கு இந்தியாவின் ஒத்துழைப்பும், ஆதரவும் வேண்டுவதாக இந்த விஜயம் அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தவகையில் - இந்திய விஜயம் மூலம் தனது நிலையை வலுப்படுத்திக்கொள்ள முனையும் ஜனாதிபதி சந்திரிகா ஒருபுறமும் - அமைதியைக் காட்டி உதவி வழங்கும் மாநாட்டிலிருந்து பெரும் நிதியைப் பெற்றுவிட முனையும் ரணில் அரசாங்கம் மறுபுறமுமாக - கொழும்பு அரசியல், தத்தம் நிலைகளைக் காப்பதற்கும், தத்தம் அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்குமான போராட்டமாகவே நகர்ந்து செல்கின்றது.

# எண்ணெய் அகழ்வுப் பணிகள்; விரைவில் மன்னாரில் ஆரம்பம்!

(கொழும்பு)

மன்னார் மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதிகளில் எண்ணெய் அகழ்வுப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

முதற்கட்டமாக, மன்னாரில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான திட்டம் இம்மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

1970 ஆம் ஆண்டு மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது எண்ணெய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 1980 இல் கனேடிய நிறுவனம் ஒன்று ஆய்வு செய்து எண்ணெய் இருப்பதை உறுதிசெய்திருந்தது.

அடுத்த ஆய்வினை விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காகவே நாடாளுமன்ற அனுமதி கோரப்படவுள்ளது.

இந்த ஆராய்வு மற்றும் அகழ்வுப் பணிகளில் ஈடுபடுவதற்காகச் சர்வதேசரீதியில் கேள்விப்பத்திரங்களைக் கோரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கேள்விப்பத்திரக் கோரலுக்காக இணையத்தளம் ஒன்றை உருவாக்கப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது.

காவிரிப்படுகையில் எண்ணெய் இருப்பது நீண்டகாலத்துக்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டது. இதில் 65 வீதமானது இந்தியாவின் பொருளாதாரக் கடல் எல்லைக்குள் இருக்கின்றது. இப்பகுதியில் எண்ணெய் அகழ்வுப்பணியை இந்தியா ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

இலங்கையில் பொருளாதாரக் கடல் எல்லைக்குள் இருக்கும் எஞ்சிய 35 வீதமான பகுதி எண்ணெய் வளத்தை அகழவே தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் சுவீடிஷ் புவிப்பௌதிகவியல் நிறுவனமான 'பெற்றோகாம்' செய்மதி ஆய்வின் மூலம் மன்னார் பகுதியில் எண்ணெய் வளம் இருப்பதை உறுதிசெய்திருந்தது.

இதன்தொடராக, 3 லட்சத்து 2 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் செய்யப்படவுள்ள மேலதிக ஆய்வுக்கு, ஆறு லட்சத்து 5 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளது.

இதில் 3 லட்சத்து 25 ஆயிரத்து 500 டொலரைப் பெற்றோகாம் நிறுவனமும், 1 லட்சத்து 92 ஆயிரம் டொலரை சுவீடிஷ் உதவி நிறுவனமான சீடாவும், எஞ்சிய தொகையை இலங்கை அரசாங்கமும் செலவிடவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்தியகிழக்கு செல்லவிருந்த எம்.பிக்களின் பயணம் ரத்து!

ஈராக்கில் இடம்பெற்றுவரும் போரினால் மத்தியகிழக்கில் உள்ள இலங்கையர்களின் நிலை தொடர்பாக ஆராய 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ளவிருந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையர்களின் நலன் பற்றி அறிந்துகொள்ள ஐ.தே.க, பொ.ஐ.மு. மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் 16 பேர் மத்தியகிழக்குச் செல்லவிருந்தனர்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்த விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து இப்பயணம் ரத்துச் செய்யப்பட்டது.

எம்.பிக்கள் குழு மத்தியகிழக்குச் செல்வதற்கு 20 லட்சம் ரூபா செலவாகும் என்றும், இது வீணான செலவு என்றும் மகிந்த ராஜபக்ஷ சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஆறு இலட்சம் ரூபாவுக்கு விற்கப்பட்ட பிரிட்டிஷ் விசா!

## பொலிஸ் விசாரணைகளில் அம்பலம்

(கொழும்பு)

பிரித்தானியத் தூதரகத்தில் விசா வழங்கும் அதிகாரி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் முறைகேடுகளில் சம்பந்தப்பட்டது தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரிகள், பணத்துக்காகப் பயணமுகவர்களுக்குப் பிரித்தானிய விசா வழங்கப்பட்டதைக் கண்டுபிடித்துள்ளனர்.

பிரித்தானியாவிலுள்ள கல்லூரிகளில் கல்வி கற்பதற்கான விசாக்கள் இவ்வாறு விற்கப்பட்டிருக்கின்றன. சட்டவிரோதமான முறையில் - தவறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இந்த விசாக்கள் பெறப்பட்டிருக்கின்றன.

பயணமுகவர் ஒருவருக்கு ஆறு இலட்சம் ரூபாய்க்கு இந்த விசாக்களை பிரிட்டிஷ் தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் விற்பனை செய்ததாகத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, மேற்படி குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் அதிகாரியைச் சேவையிலிருந்து நீக்கத் தூதரகம் முடிவு செய்திருப்பதாகத் தூதரகத்தின் பேச்சாளர் மாக்கி ரெட்ரொங் தெரிவித்தார். அத்துடன், இது தொடர்பாக ஸ்கொட்லண்ட்யார் குழுவினரின் விசாரணைகளும் தீவிரமாக இடம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொ. ஐ. முவின் தீர்வுத்திட்டம்; ஜே. வி. பி. நிராகரித்தது!

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி கடந்த 2000 ஆம் ஆண்டு முன்வைத்த தீர்வுத்திட்டத்தை ஜே.வி.பி. நிராகரித்துள்ளதையடுத்து இருதரப்புக்கும் இடையில் நெருக்கடிநிலை தோன்றியுள்ளது.

இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பாக நடததப்பட்ட பேச்சுக்களின்போது, 2000 ஆம் ஆண்டு முன்வைத்த தீர்வுத்திட்டத்தை பொ.ஐ. முன்னணி சமர்ப்பித்திருந்தது.

இந்தத் தீர்வுத்திட்டத்தினை ஜே.வி.பி. நிராகரித்துள்ளதாலேயே நெருக்கடிகள் உருவாகியுள்ளன. இதேவேளை - ஜே.வி.பி. தனது நிலைபபாட்டை மாற்றவேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## ஜோன் வெஸ்பேர்க் நாடு திரும்புகிறார்!

இலங்கைக்கான நோர்வே தூதுவரான ஜோன் வெஸ்பேர்க் நாளை தனது பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்து கொண்டு நாடு திரும்பவுள்ளார்.

வெஸ்பேர்க் இலங்கையில் தூதுவராக இருந்தபோதுதான், சமாதான முயற்சிகளில் நோர்வே ஈடுபடத்தொடங்கியது என்பதுடன், சமாதான முயற்சிகளில் இவர் தீவிர பங்காற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெஸ்பேர்க் துரோகி என்றும், இவரை நாட்டை விட்டு வெளியேற்றவேண்டும் எனவும் ஜே.வி.பி உள்ளிட்ட சில சிங்களப் பேரினவாதச் சக்திகள் போராட்டங்களை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

# தலைமறைவான கிரிக்கெட் வீராங்கனைகள்; தொடர்ந்தும் மர்மம் நீடித்து வருகின்றது!

(கொழும்பு)

மேற்கிந்தியத்தீவுச் சுற்றுப்பயணத்தை முடித்துத் திரும்பிய போது, லண்டன் - ஹீத்ரோ விமான நிலையத்தில் தலைமறைவான இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் மூன்று வீராங்கனைகள் பற்றிய மர்மம் தொடர்ந்து நீடித்துவருகிறது.

அணித் தலைவி சுதர்சினி சிவநாதன், ரமணி பெரேரா, ஹிரோசி அபேசிங்க ஆகியோர் பார்படோசிலிருந்து நாடு திரும்பிக்கொண்டிருந்தபோது, விமானம் ஹீத்ரோ விமான நிலையத்தில் தரித்தபோது காணமற்போயிருந்தனர்.

இவர்கள் பற்றிய விபரங்களை அறிவதற்கு லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முயற்சிகளை மேற்கொண்ட போதும் - இதுவரை எந்தத் தகவலையும் பெறமுடியவில்லை.

இதையடுத்து, பிரித்தானிய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுடன் தூதரக அதிகாரிக்ள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இதேவேளை, இலங்கை மகளிர் கிரிக்கெட் குழுவினர் பயணம் செய்த விமானசேவை நிறுவனம் - மேற்படி கிரிக்கெட் வீராங்கனைகள்- பிரித்தானியாவில் தங்குவதற்கான விசாவைப் பெறவில்லை என்றும், விமான இடமாற்றத்துக்கான விசாவை மட்டும் பெற்றிருந்தனர் என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேற்படி மூன்று கிரிக்கெட் வீராங்கனைகளும் பிரித்தானியாவில் சட்டபூர்வ விசாவைப் பெற்றிருப்பதாக இன்னொரு தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வடகடலில் பாதுகாப்பை உஷார்படுத்த உத்தரவு!

வட கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் மீன்பிடிப்படகுகளைத் தடுக்க, கடற்படைக்குக் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் வடபகுதிக் கடற்பரப்பில் அதிகரித்துள்ளதையடுத்து, கிழக்குக் கடலில் சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்துமே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரைத் தொடர்ச்சியான, உஷார்நிலையில் இருக்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# சீனாவின் அதிகாரப் பகிர்வு முறையும் திபெத், சின்சியாங் பிராந்தியங்களும்

சென்றவாரத் தொடர்ச்சி...

இப்பொருளாதார வலயங்களில் சீனாவின் கடல்கடந்த கம்பனிகளுடன்(Chinese overseas Companies) இணைந்து கூட்டுமுயற்சியின் அடிப்படையிலேயே ஏனைய சர்வதேச நாடுகள் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



தலாய் லாமா - திபெத்தின் ஆன்மீகத் தலைவர்.

இவ்வாறு உருவாக்கப்படும் விசேட பொருளாதார வலயங்களின் முகாமைத்துவம் - நேரடியாக மத்திய திட்டமிடற்குழுவின் கைகளிலேயே காணப்படும். எனவே, இவ்

**சுயநிர்ணயம் ஒரு பார்வை**

**பகுதி-28**

விசேட பொருளாதார வலயங்களிற்கும், அந்தப்பிரதேசத்து அரச அவைக்கும் எவ்வித தொடர்புகளும் காணப்படமாட்டாது.

எனவே, ஒவ்வொரு அரச அவைகளிற்குரிய பொருளாதார வளங்களை ஒதுக்குவதற்கான அதிகாரம்- சனாவின் கூட்டு மொத்தமான பொருளாதாரத் திட்டமிடலேயே தங்கியிருக்கிறது. 1997 ஜூலை 1 ஆம் திகதியிலிருந்து சீனாவுடன் ஹொங் கொங் இணைந்ததன் பின்னர், சீனா இரண்டு விதமாகச் செய்யும் பொருளாதாரத் திட்டமிடல் பாரியளவில் முனைப்புப் பெற்றுள்ளது. அதனை விசேடமாகப் பிறிதொரு இடத்தில் ஆராயவேண்டும்.

சீனா தனது இறையாண்மைக்கு உட்பட்ட பிரதேசத்தில் மூன்றுவிதமான அதிகாரப்பகிர்வு முறைகளை நடைமுறைப்படுத்த முனை கின்றது.

ஒன்று - இனத்துவரீதியான "அரச அவை" (State Councils) இது பற்றிக் கடந்த வாரத்தில் நாம் பார்த்திருந்தோம்.

இரண்டாவதாக - பொருளாதார மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டும், சர்வதேச வர்த்தகத்தைக் கருத்திற்கொண்டும் உருவாக்கப்பட்ட 'விசேட பொருளாதார வலயங்கள்' ஆகும்.

இவற்றினையடுத்து மூன்றாவதாக - சீனக்குடியரசின் வரலாற்றுப் போக்கில் அதன் இறைமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக இன்றும் இருந்துவரும் இரண்டு பிரதேசங்களான திபெத்திற்கும், சின்சியாங் பிரதேசத்திற்கும் - சீனா பிறிதொரு அதிகாரப்பகிர்வு முறையைக் கையாண்டுவர எத்தனிக்கின்றது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி - திபெத்தினை "தேசிய சுயாட்சிப் பிராந்தியமாக" 1979 ஆம் ஆண்டு முதல் பிரகடனப்படுத்தியுள்ளது. திபெத்தின் கலாசாரம், வழக்காறுகள் மற்றும் குறிப்பாகப் பௌத்த மதம் இவற்றுக்கான அங்கீகாரத்தினை 'தேசிய சுயாட்சிப் பிராந்தியசபைக்குள்' வழங்கி, பிரிவினைவாதக் கோரிக்கைகளையோ அல்லது தனது தேசிய ஒருமைப்பாட்டுக்கான அச்சுறுத்தல்களையோ அது தணிக்க முயல்கின்றது.

எனினும், திபெத்தின் சுயாட்சிக் கோரிக்கைகள் தனக்கு அச்சுறுத்தல் மிக்கதாகவே இன்றும், மக்கள் சீனா கருதி வருகின்றது. ஏனெனில், சர்வதேச உலகில் - சீனாவிற்குப் பகையான நாடுகள் - திபெத் தனியாகப் பிரிந்து செல்லக்கூடிய தகுதிப்பாட்டினைச் சர்வதேசச் சட்டங்கள் வழங்குகின்றன எனக் கூறி வருவதுடன், திபெத் பிரிந்து செல்வதற்கான ஆதரவையும் நல்கி வருகின்றன.

அவ்வாறு திபெத் த்னியாகப் பிரிந்து செல்வதற்கான முக்கியமான காரணமாக, 1911 ஆம் ஆண்டு முடியாட்சிக்கு எதிரான புரட்சிகளின்போது, திபெத் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன், அக்காலப்பகுதியில் திபெத் பிரித்தானியாவின் காலனித்துவ நாடாகக் காணப்பட்டமையையும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

இதனாலேயே திபெத்தின் அரசியல், கலாசாரம் மற்றும் விழுமியங்கள் முற்றிலும் சீனக் குடியரசிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக் கூட்டம்.

ஆனால், வரலாற்றுரீதியாக சீனாவினது பாகமாகவே திபெத் கருதப்படவேண்டும் என்பது சீனாவின் வாதமாகக் காணப்படுகின்றது.

சீனா - திபெத்திய முரண் நிலை

**வேலும்மயிலும் சேந்தன்**

யைத் தீர்ப்பதற்காக 1951 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி, 17 விடயங்களை உள்ளடக்கி ஒரு சமாதான உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. இவ்வுடன் படிக்கையின் பிரகாரம் - திபெத்திய பிரதேசத்தின் தேசிய பாதுகாப்பும் (National Defence) மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் (External Affairs) மட்டுமே சீனாவிற்கு உரித்துடையதாகக் காணப்படும்.

இந்த வகையில், சீனா - திபெத்திய உறவினை "தாய் நாட்டின் - விரிவான குடும்பம்" (Extented family of the Motherland) என்ற அடிப்படையில் தீர்க்கப்பட்டதாக 1951 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கூறுகின்றது.

ஆனால், திபெத்தின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவிற்குச் சனாவின் கம்யூனிஸ மத்திய குழுத் திட்டமிடல் முறையை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சமயக் கோட்பாடுகள் இடங்கொடுக்கவில்லை.

*பிரதி செவ்வாய் தொடரும்....*

---

# தொழுநோய் / குஷ்டரோகம்

*நேற்றைய தொடர்ச்சி........*

**குஷ்டரோகமற்ற சாதாரண தடங்கள்**

❖ தோலின் பிறப்பிலிருந்தே காணப்படும் அடையாளங்கள்.

❖ சாதாரண தோலுக்குச் சமனான தொடுகையுணர்வுடைய தடங்கள்.

❖ எரிவு அல்லது கடியுடனான தடங்கள்.

❖ தூயவெள்ளை, கறுப்பு, சிவப்பு நிறங்களில் காணப்படும் தடங்கள்.

❖ செதிலுடைய தடங்கள்.

❖ விரைவாகத் தோன்றி, விரைவாகப் பரவி, விரைவாக மறைகின்ற தடங்கள் ஆகியன தொழுநோயின் அறிகுறிகள் அல்ல. எனவே வைத்தியப் பரிசோதனை செய்து கொள்வது சிறந்தது.



**தொழுநோயாளரைப் பரிசோதிக்கும் முறை**

❖ முழு உடலையும் பரிசோதிக்க வேண்டும். சூரியஒளி அல்லது வெளிச்சமுள்ள ஓர் அறையில் இதனை மேற்கொள்ளலாம். இதன்போது, பரிசோதிக்கப்படுபவரது மனநிலை பாதிக்காவண்ணம் செயற்படவேண்டும்.

❖ உடலிலுள்ள தடங்களில் அல்லது அடையாளங்களில் எரிவு அல்லது கடி இருக்காது.

❖ உணர்ச்சியில்லாத தடங்கள் உடலில் எங்காவது இருந்தால் அது - தொழுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

❖ கடந்த காலங்களில் சிகிச்சை பெற்றிருந்தாரா என நோயாளியை வினவலாம்.

❖ முகம், கை, பாதங்கள், கண போன்ற பகுதிகளில் அங்க வீனங்கள் உள்ளனவா என அவதானிக்கலாம்.

❖ உங்களுக்கு இவற்றில் சந்தேகம் இருந்தால் வைத்தியசாலையின் அல்லது சுகாதார உத்தியோகத்தரின் உதவியை நாடலாம்.

**அங்க விகாரமின்றிக் குணப் படுத்தலாம் -**

நோய் அறிகுறிகளைக் கண்டதுமே, நோயை இனங்கண்டு பல் கூட்டு மருத்துவச் சிகிச்சை மூலம் (MDT) கிரமமாகச் சிகிச்சை பெற்றுவந்தால், அங்க விகாரமின்றி குஷ்டரோகத்தைக் குணப்படுத்தலாம். குஷ்டரோகிகள் சிகிச்சையை இடையில் நிறுத்தக்கூடாது.

**தொழுநோய் புண்களையும் அங்கவிகாரங்களையும் ஏற்படுத்தும் -**

இந்நோய் நரம்புகளைப் பாதிப்பதால், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணர்வற்றநிலை ஏற்படுகின்றது. சூடோ, குளிரோ, வலியோ உணரப் படமுடியாமையால் நோயாளி அறியாமலேயே அவ்விடங்களில் காயம் ஏற்படுகின்றது. இந்தக் காயங்கள் சிதழ்பிடித்துப் பெரும் புண்ணாவதனால், காலப்போக்கில் அங்க விகாரங்களை ஏற்படுத்தலாம். தொழுநோயினால் தசைநார்கள் பலவீனமடைதல், முடக்குவாதம் என்பனவும் ஏற்படலாம். அசட்டையாக இருந்துவிட்டால் இது மாற்றமுடியாத அங்கவிகாரங்களை உண்டுபண்ணும்.

**குஷ்டரோகிகள் மற்றவர்களுடன் வீட்டிலேயே வசிக்கமுடியும் -**

சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்ட நோயாளிகளிடமிருந்து நோய் தொற்றுவ தில்லை என்பதனால், குஷ்டரோகிகள் வீட்டிலேயே தங்கியிருக்கலாம். இவர்களுடன் பழகுபவர்கட்கு ஆபத்தில்லை. எனவே இவர்களைத் தனிமைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. நோயாளிகள் தொழில் புரிந்தும், திருமணம் செய்தும், பிள்ளைகள் பெற்றும் சாதாரண வாழ்க்கை நடாத்தமுடியும்.

**தொழுநோய் சிகிச்சை -**

நோய் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.

1. தொற்றும் வகை - 1-5 தடங்கள் - 6 அட்டைகள்.

2. தொற்றா வகை - 5 இற்கு மேற்பட்ட தடங்கள் - 12 அட்டைகள்.

தொற்றும்வகையில் செந்நிற மினுமினுப்பான, வழுவழுப்பான தடங்கள் உடலின் வலது, இடது பாகங்களில் சமச்சீராகக் காணப்படும். இவை முற்றாக உணர்ச்சியற்றிருப்பதில்லை. பாதிக்கப்பட்ட தடங்கலில் நுண்ணங்கி அதிக எண்ணிக்கையில் காணப்படும். தொற்றும் வகை நோயுடையவர்களின் மேல் தோல் கறையை - நுணுக்குக் காட்டியினூடாக அவதானிக்கும் போது, நுண்ணங்கிகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். இவர்களில் புருவமயிர்களும் இழக்கப் பட்டிருக்கும்.

இந்நோய்க்கான சிகிச்சையை உங்களுக்கு அருகிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். இச் சிகிச்சைமுறை MDT என அழைக்கப்படும். இதற்கென வழங்கப்படும் ஒரு அட்டையில் 4 கிழமைக்குரிய மருந்துகள் காணப்படும்.

**சிறியவர்கள்**

10-14 வயதிற்கிடைப்பட்டவர்கள்.

தொற்றாவகையாயின் - நீல அட்டையும்

தொற்றும் வகையாயின் - மண்ணிற அட்டையும் பயன்படுத்த வேண்டும்.

**வளர்ந்தவர்கள் -**

தொற்றாவகையாயின் - பச்சை அட்டையும்,

தொற்றும் வகையாயின் - சிவப்பு அட்டையும் பயன்படுத்த வேண்டும்.

தொற்றா வகையாயின் 6 அட்டைகளும், தொற்றும் வகையாயின் 12 அட்டைகளும் பூரணமாகப் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு அட்டையிலும் முதல் நாளுக்குரிய மருந்துகள் அட்டையின் மேற்பகுதியில் காணப்படும்.

இதனைத் தொடர்ந்து 2 தொடக்கம் 28 நாட்களுக்குரிய மருந்துகள் காணப்படும். இவை அட்டையின் பிற்பகுதியில் அடையாளம் இடப்பட்டிருக்கும். மருந்தினை எடுக்கும்போது நோ, காய்ச்சல், களைப்பு, புதிய தடங்கல் தோன்றல் ஆகியன ஏற்பட்டால், உடனடியாக வைத்தியரை அணுக வேண்டும். பயன்படுத்தும் மருந்துகளில் நிறமாற்றம், பழுது ஆகியன ஏற்பட்டால், அவற்றை மாற்றிப் புதியவற்றைப் பெற்றுப் பாவிக்க வேண்டும்.

**தொழுநோய்க்கான தடுப்பு முறைகள்**

❖ இதற்குத் தடுப்பூசியோ, தடுப்பு மருந்தோ இல்லை.

❖ தொழுநோயாளியின் உறவினர், சுற்றத்தார் அல்லது நீண்ட காலம் நெருங்கிப் பழகியவர்கள் - தங்களையும் தொழுநோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தி, தொழுநோய் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

❖ தொழுநோய் இருப்பது வைத்தியப் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டால், அவர் உடனடியாகச் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

❖ தொழுநோயாளர்கள் சிகிச்சையைத் தொடர்ந்தும் ஒழுங்காக எடுக்கின்றாரா என்பதை உறவினர்கள், சுற்றத்தார் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ யாருக்காவது குஷ்டரோகம் உள்ளது என நீங்கள் சந்தேகப்பட்டால், அவரை அருகிலுள்ள வைததியசாலைக்கு அனுப்பி அல்லது உங்கள் பகுதிச் சுகாதார உத்தியோகத்தரை அணுகி நோயைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவும்.

❖ தொழுநோயாளி என இனங்காணப்பட்டவரை இயல்பாக நடாத்துங்கள். அவரைச் சமூகத்திலிருந்து அல்லது குடும்பத்திலிருந்து



ஒதுக்கிவைக்க வேண்டிய அவசியமில்லை.

**தொழுநோயும் அறிய வேண்டியவையும் -**

❖குஷ்டரோகத்தின் முதல் அறிகுறி - சருமத்தில் தோன்றும் ஓர் உணர்வற்ற, கடி உண்டுபண்ணாத தடமாகும். நோயை இழப்புகளின்றிக் குணமாக்க- நுண்ணங்கி மனிதனுக்கு வழங்கும் ஒரேயொரு சந்தர்ப்பம் இதுவே.

❖ இந்நோய் இலகுவில் பரவுவதில்லை. 90 வீதமானவர்கள் இந்நோய்க்கு இயற்கையான எதிர்ப்புச்சக்தி உடையவர்கள்.

❖ அரிதாகவே தொற்றுகிறது. 20 வீதமான நோயாளிகளே தொற்றலை ஏற்படுத்தக்கூடியவர்கள்.

❖ சிகிச்சைபெறும் நோயாளியிடமிருந்து தொழுநோய் - மற்றவருக்குத் தொற்றுவதில்லை.

❖ தொழுநோயாளிகள் சாதாரண வாழ்க்கை நடாத்தத் தகுதியுடையவர்கள்.

❖ தாமதமாகச் சிகிச்சைப் பெற்றுக்கொள்ளல், அங்க விகாரங்களை உண்டுபண்ணும்.

**செ.கஜன்**

4 ஆம் வருட மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# ஈராக்-போர்க்களம்

# பக்தாத் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றியுள்ளதாக அறிவிப்பு!


புகைமண்டலம் சூழும் பக்தாத் நகரம்.

பக்தாத் நகருக்குள் நுழைந்துவிட்டதாக முன்னர் அறிவித்த அமெரிக்கப் படைகள், தற்போது பக்தாத்தை சுற்றிவளைப்பதே தமது நோக்கம் என அறிவித்துள்ளனர். பக்தாத் நகரின் மேற்கு, கிழக்குப் பகுதிகளைச் சுற்றிப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பக்தாத்துக்குள் தென்புறமாக ஊடுருவ முயன்ற அமெரிக்கப் படைகளை, ஈராக் குடியரசுக் காவற்படை விரட்டியடித்துவிட்டதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர். பக்தாத் மீது அமெரிக்கப் படைகள் தொடர்ந்தும் ஆட்லறி மற்றும் விமானக் குண்டுவீச்சை நடத்திவருகின்றனர்.



இதேசமயம், தமது படைகள் ஈராக் தலைநகருக்குள் நுழைந்து ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், சிறிய அளவிலான படையினரே தாக்குதலில் ஈடுபடுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். எனினும் தகவற்துறை, வெளிநாட்டமைச்சு அலுவலகங்கள் தொடர்ந்தும் ஈராக்கின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

எதிரிப் படைகளின் டாங்கி, ஆட்லறி, கவசவாகனங்களை அழிப்பவர்களுக்கு 8000 டொலர் பரிசு தரப்படும் என ஈராக் தொலைக்காட்சி அறிவித்தது.

உலகவலம்

# ஈராக்கின் எதிர்க்கட்சிப் படைகள் தெற்குப் பகுதியில் தரையிறக்கம்!


அகமட் சலாபி

ஈராக்கின் எதிர்க்கட்சிகளின் படைகளை, அமெரிக்கப் படையினர் தெற்கு ஈராக்கிற்குள் கொண்டு சென்று இறக்கியுள்ளனர். தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளினுள் சுமார் ஆயிரம் படையினரை இவ்வாறு அமெரிக்கா தரையிறக்கியுள்ளது.

ஈராக் தேசியக் காங்கிரஸ் கட்சித்தலைவர் அகமட் சலாபி தலைமையில் இந்த எதிர்க்கட்சிப் படைகள் செயற்படவுள்ளன. இந்தப் படையினரே, ஈராக் விடுவிக்கப்பட்ட பின்னர் அந்நாட்டின் நிரந்தரப் படையினராக நியமிக்கப்படுவர் என அமெரிக்க கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் பீட்டர் பேஸ் தெரிவித்தார். இப்படையில் உள்ள சிலர் அமெரிக்காவிலிருந்தும் வந்துள்ளனர். அகமட் சலாபி 1958 இல் சதாமின் புரட்சியின்போது நாட்டை விட்டுத் தப்பியோடியவராவார். தற்போது அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய ஈராக்கியத் தலைவராக இவர் உள்ளார். இவரின் ஆதரவாளர்கள் சிலர் சி.ஐ.ஏ. மற்றும் பென்ரகன் என்பவற்றில் பணியாற்றுகின்றனர்.


ஈராக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள்.

# அமெரிக்காவின் வேவுப் படைகள்; பக்தாத்துள் ஊடுருவியுள்ளனவாம்!



(பக்தாத்)

பக்தாத் அருகே நடைபெறும் தமது போர் குறித்த விளக்கங்களை கட்டாரில் உள்ள அமெரிக்க கட்டளைப்பீடம் நேற்று வெளியிட்டுளளது.

பக்தாத்தை சுற்றி வளைப்பது தமது நோக்கமல்ல. அதற்கான போதிய படையும் எம்மிடமில்லை. ஆனால், நகருக்கான அனைத்து வீதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன என அவர்கள் குறிப்பிட்டனர். சுமார் 20 ஆயிரம் துருப்புக்கள் பக்தாத் போரில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க இராணுவ வேவுப் படைகள் மோதலைப் பயன்படுத்தி பக்தாத்தினுள் ஊடுருவி தகவல்களை சேகரித்ததும், செய்மதித் தகவல்களின் உதவியுடன் பக்தாத் மீது இறுதிக்கட்டத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என அமெரிக்கப் படையதிகாரிகள் தெரிவித்தனர்.

# சதாமின் சகா கெமிகல் அலி கொல்லப்பட்டாரா?

(லண்டன்)

ஈராக்கின் தென்பகுதித் தளபதியும், சதாமின் மைத்துனருமான கெமிகல் அலி என அழைக்கப்படும் அலி ஹசன் அல்-மஜீத், தமது விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டதாக பிரிட்டிஷ் படைகள் அறிவித்துள்ளன. எனினும், இது குறித்து தம்மால் உறுதியாக எதுவும் கூற முடியாதுள்ளதாக அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கொல்லப்பட்ட கெமிகல் அலியின் சடலத்தைத் தாம் இதுவரை மீட்கவில்லை என்பதை பிரிட்டிஷ் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர். அலியின் மெய்க்காவலர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட கட்டடத்தினுள் அலியும் இருந்ததாக பிரிட்டிஷ் களமுனை அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

1988 இல் குர்திஷ் இன மக்கள் மேற்கொண்ட கிளர்ச்சியின்போது, அவர்களை அடக்க இரசாயன வாயுவைப் பயன்படுத்தி பெருமளவு குர்திஷ் மக்களை இவர் கொன்றமையாலேயே கெமிகல் அலி என்ற பட்டப்பெயர் இவருக்கு கிடைத்தது.




அமெரிக்க வான் தாக்குதலில் இரண்டு கைகளையும் இழந்த ஈராக்கியச் சிறுவன்.


பக்தாத் வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் ஈராக்கியச் சிறுமி ஒருத்தி தன் தந்தையுடன்.


அமெரிக்கப் படையுடன் இணைந்து ஈராக்கிற்கு எதிராகப் போரிடக் களம் குதித்த குர்திஷ் பெண்கள் படையணி.


அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளால் உடைக்கப்பட்ட சதாம் ஹுசைனின் சிலையுடன் ஈராக் மக்கள்.


பக்தாத் விமான நிலையத்தை கைப்பற்றிய சமயத்தில் - அங்கு அமெரிக்கப் படைகள். பின்னால் - ஈராக்கிய விமானம் ஒன்றும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இசை, நடன, நாடக விழா இன்று திருகோணமலையில்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடகவிழா இன்று திருமலையில் - உவர்மலை விவேகானந்தாக் கல்லூரிக் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் - திருமதி லூக்காஸ் பொது ஈகச் சுடரேற்றுவார். மங்கள விளக்கை, பிரம்மஸ்ரீ இரவிச் சந்திரக் குருக்களும், விழாச் சுடரை ஆர். தியாகலிங்கம், சு.வில்வரட்ணம், உபநந்த வெலிகல, திருமதி தேவிகாராணி முருகுப்பிள்ளை ஆகியோர் ஏற்றிவைக்கவிருக்கின்றனர்.

# போராளியை தாக்கிய பொலிஸ்; இடமாற்றுவதற்கு அதிகாரி சம்மதம்!

கடந்த மாதம் 29 ஆம் திகதி கச்சாய்ப் பகுதிக்கு அரசியற் பணிக்காகச் சென்ற விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர், பொலிஸ் கான்ஸ்டபிளால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

இவ்விசாரணைக்கு கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி.சேனாதீர, போராளியைத் தாக்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் சரத் விக்கிரம ஆராய்ச்சி, விடுதலைப் புலிகளின் அரசியற் துறையைச் சேர்ந்த நிசாந்தன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் போராளியைத் தாக்கிய மேற்படி கான்ஸ்டபிளை, இடமாற்றம் செய்யவேண்டுமென புலிகளால் கோரப்பட்டது. அதற்கு பொலிஸ் அதிகாரி பதிலளிக்கையில்,

மேற்படி சம்பவம் தொடர்பான பொலிஸ் கான்ஸ்டபிள் மீது தற்போது விசாரணை நடைபெற்று வருகின்றது. இதன்பின்னர் தகுந்த நடவடிக்கையைத் நாம் எடுப்போம் எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் நடைபெறாமல் தடுப்பதாகவும் உறுதியளித்துள்ளதுடன், இதில் சம்பந்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை இடமாற்றவும் சம்மதம் தெரிவித்தார். (ரா,9)

## மனித....

ளவர் தேசியத்தலைவர் வே.பிரபாகரன்', 'எமது தாயகம் தமிழீழம்', 'எமக்கு வேண்டும் சுயநிர்ணய உரிமை', 'எமக்கு வேண்டும் எம் தேசியம்', எமக்கு வேண்டும் எமது தாயகம்' என்று டொச் மொழியில் உரத்துக் குரல் எழுப்பினர்.

பேரணியின் ஆரம்பத்தில் அல்பேட் உரை நிகழ்த்தினார். அதன் பின் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் உரிமைக் குரலை எழுப்பினர். பேரணியின் முடிவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். இதன் பின், மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உரை நிகழ்த்தினார்.

## இலங்கை....

புரிந்துணர்வு முழுமையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எமது இராணுவம் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளித்து வருகின்றது. மேலும் இராணுவ உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ராணுவமுகாம்...

நாம் கூறியுள்ளோம். அவர்களுக்குப் பிடித்த இடத்தை அவர்கள் காட்டும்போது, மக்களின் இயல்பு வாழ்க்கையை அது பாதிக்குமானால் அந்த இடத்தை அவர்கள் எடுக்க நாம் சம்மதிக்கமாட்டோம்.

ஆகவே - ஒதுக்குப்புறமான, இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காத ஒரு இடமாகக் காட்டுங்கள் என்று நாம் அவர்களிடம் கூறியுள்ளோம். கூட்டமைப்பின் வேலைத்திட்டம் - மக்களைப் பாதுகாப்பது, இராணுவ முகாம் அமைக்க இராணுவத்துக்கு இடம் ஒதுக்கிக் கொடுப்பதல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## விழிசிட்டியில் ஈ.பி.டி.பி...

யாளர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, சுன்னாகம் பொலிஸார் - சுன்னாக நீதிபதி திருமதி இளங்கோவனையும் கிராமசேவையாளரையும் அப்பிரதேசத்திற்கு அழைத்துச் சென்ற சமயம் மேற்படி சடலம் கண்டெடுக்கப்பட்டது.

இது குறித்து சுன்னாக நீதிபதி திருமதி இளங்கோவன் நமது ஈழநாட்டுக்குத் தெரிவிக்கையில் -

பொலிஸார் தெரிவித்த முறைப்பாட்டின் நிமித்தம் அப்பகுதிக்குச் சென்ற சமயம் மலசலகூடக் குழியினுள் சடலம் தலைகீழாகக் கிடந்தது. கால்கள் இரண்டும் மலசலகூடக் குழியின் வெளியே மடிந்து கிடந்தன. சடலத்தில் வெள்ளை காற்சட்டை காணப்பட்டதுடன், முகம் மறைக்கப்பட்டிருந்தது. கைகள் இரண்டும் கட்டப்பட்டிருந்தன. மலசலகூடத்தின் வாசலில் இரத்தக் கறைகளும் காணப்பட்டன என்றார்.

இச்சடலம் தமது உறுப்பினரான அமிர்தலிங்கன் வாசன் (வயது 20) என்பவருடையது என, ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அவ்விடத்திலேயே அடையாளம் காட்டியுள்ளனர்.

ஈ.பி.டி.பி. உறுப்பினரான 3 ஆம் வட்டாரம், அனலைதீவைச் சேர்ந்த இவர் - சுன்னாகத்தில் வசிப்பவர் எனவும், இவர் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குக் கடந்த நான்காம் திகதி சென்றபின்னர் இவர் வீடு திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஜெகன், இச்சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார். மீட்கப்பட்ட சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(லி,சு,9,68)

**பத்திரிகை விநியோகஸ்தர் தேவை**

'நமது ஈழநாடு' பத்திரிகை விநியோகிக்க சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர் தேவை. சாரதி அனுமதிப் பத்திரம், மற்றும் ஆவணங்களுடன் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

பொது முகாமையாளர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இந்தியாவை நேசசக்தியாக...

வெளிவருவார், அவரைக் குறிவைத்து தாக்குதல் நடாத்துவதற்காகத்தான் ஆழ ஊடுருவித் தாக்கும் குழு அனுப்பப்பட்டது. ஆனால், எமது படையணிகளை, பல்லாயிரக்கணக்கான புலி வீரர்களை காட்டுக்குள் அனுப்பி சல்லடை போட்டுத் தேடி அந்தக் குழுவைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தோம்.

நாங்கள் உஷார் அடைந்ததைக் கண்ட சிங்கள ஆயுதக்குழு - அங்கிருந்து இரவிரவாகத் தப்பிவிட்டதாகப் பின்பு அறிந்தோம்.

ஒருபுறம் சமாதானப் பேச்சு நடந்துகொண்டிருந்தாலும், மறுபுறம் எமது தலைமையைக் குறிவைத்து இராணுவத்திலுள்ள சில பிரிவுகள் செயற்படுவதாக எமக்கு ஆழமான சந்தேகம் இருக்கின்றது.

ஆகவே - நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்கிறோம். என்னைப் பொறுத்தவரை - எனக்கு, யாராவது வந்து போட்டுத்தள்ளுவார்களோ என எதிர்பார்த்துக்கொண்டு திரிகிறேன். எனக்கு வயதும் போயிற்று, கூடவே வருத்தமும். ஹார்ட் அட்டாக் வந்து செத்தால் அகால மரணமடைந்துவிட்டார் என்று சொல்லிப்போட்டு மறந்துவிடுவார்கள். ஆனால், வன்னியில் நிற்கும்போது யாராவது, சிங்களவர் வந்து போட்டுத்தள்ளிவிட்டால் - பாலசிங்கம், களத்தில் மடிந்த மாவீரன் என்ற பெயர் வரும்.

ஆகவே - அதற்காகத் தேடித் திரிகிறேன் - யாராவது வந்து போடுங்கோ என்று (சிரிப்பு).

இரு வாரங்களுக்கு முன்னர், அரசாங்கத் தரப்பில் ஆலோசனையொன்று முன்வைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரிகேட் தலைமையகமான இரண்டு ஹோட்டேல்களும், 80 வீடுகளும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. யாழ். வைத்தியசாலைக்கு மிக அண்மையாக, நகரத்தின் மையத்தில் இராணுவம் குந்திக்கொண்டிருக்கிறது. இவர்களை யாழ்ப்பாண மையத்தில் இருந்து வெளியேற்றவேண்டுமெனக் கோரினோம்.

அதற்கு மாற்றுத்திட்டம் தந்தார்கள். அந்தத் திட்டத்தின்படி, யாழ்ப்பாண பழைய மாநகரசபை, முற்றவெளி, கோட்டை, முனியப்பர் கோயிலடி, சென்றல் கல்லூரி முன்னுள்ள வெளிகள் இவற்றை அடக்கிய பெரிய பிரதேசத்தை எடுத்து பெரிய இராணுவத்தளம் ஒன்றினை அமைப்பதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டது.

பழைய யாழ்ப்பாண மையத்தில் இந்த இராணுவத் தளத்தினை நிறுவினால், தாம் தற்பொழுதுள்ள இடத்திலிருந்து வெளியேறுவோமெனச் சொன்னார்கள். நாங்கள் அதனை மறுத்துவிட்டோம். இது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு நடக்கும் ஆக்கிரமிப்பே தவிர இராணுவ விலகல் அல்ல. இவர்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விலகுவது நோக்கமல்ல. எமது மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வது இவர்களுக்கு விருப்பமில்லையென்பது தெட்டத் தெளிவாகிறது.

இராணுவ ஆக்கிரமிப்பை விலக்க விரும்பாத அரசாங்கம், தமிழர்களுக்கு பூரண சுயாட்சியுடைய தீர்வுத்திட்டத்தினைக் கொடுக்குமா என்பது பெரிய கேள்விக்குறியாகவுள்ளது.

எனினும், நாம் பேசுகிறோம். நாம் உலகத்துக்காகப் பேசவேண்டியிருக்கிறது. உலகம் எதிர்பார்க்கிறது, புலிகள் உண்மையாக சமாதானத்தில் ஈடுபடுகின்றனரா எனப் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

எனவே - இப்படியான தடைகள், பிரச்சினைகள், நம்பிக்கையீனங்களுக்கு மத்தியிலும், இத்தகைய ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து பேசுகிறோம். நாங்கள் நேர்மையாக, நிதானமாக, உண்மையாக பேச்சுக்களில் பங்கு பற்றுகின்றோம். உலகத்துக்கு உதாரணமாக எடுத்துக்காட்டுகிறோம்.

சிங்கள அரசு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வளவு இடையூறுகளை விளைவிக்கின்றார்கள் என்பதனை உலகிற்கு எடுத்துக்கூறும் முகமாகவே பேச்சுக்களை நடாத்துகின்றோம்.

எமது கடலிலும் எமக்குக் கட்டுப்பாடுகள். சீனாக்காரன் வரலாம், இந்தியாக்காரன் வரலாம். ஆனால் தமிழனுக்கு கடலில் கட்டுப்பாடு. இப்படி எங்கள் கடற்பரப்பில் பெரிய அநியாயம் நடக்கிறது. அதற்கு மூல காரணம் அம்மாவின் ஆளான கடற்படைத்தளபதி. அவருக்கு மூன்று வருட பதவி நீடிப்புக் கொடுத்து, எப்படியாவது நீ பிரச்சினையைக் கிளப்பி, புலிகளை சண்டையைத் தொடக்கவை என்று அம்மா ஆணை கொடுத்திருக்கிறார் போல இருக்கிறது.

உலகம், ரணில் அரசாங்கத்திற்கு அழுத்தத்தினைக் கொடுத்து வருகின்றது. நீங்கள் புலிகளுடன் போராடி வெல்ல முடியாது எனச் சொல்கிறது. புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது. எனவே, புலிகளுடன் பேசி தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வைக் கொடுங்கள் என்று சர்வதேசம், அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கிறது.

இந்த அழுத்தம் காரணமாக பேச்சுக்கு வருகிறார்கள். அதேவேளை - யுத்தத்தால் குட்டிச்சுவராகிய நாட்டைக் கட்டியெழுப்ப அவர்களுக்குக் காசு தேவை. அதனாலும்தான் பேச்சுக்கு வருகிறார்கள். சமாதானத்திற்குப் போனால்தான் மேற்குலகம் காசு கொடுக்கும். அதனால்தான் ரணில் அரசும் மேற்குலகம் சார்பாகத் திரும்புகிறது. ஆனால், அம்மா இந்தியாவிடம் ஓடுகிறார். இந்தப் பேச்சுக் குலைய வேண்டும் என்பதுதான் அம்மாவுக்கு தேவை. இந்தியாவை இதற்குள் கொண்டுவர வேண்டும். இந்தியாவைக் கொண்டு வந்து - புலிகளின் தலைமையில் இந்தப் பிரச்சினை தீரக்கூடாது என்பதில் - சுயாட்சி அதிகாரம் வட-கிழக்குக்கு வழங்கக் கூடாது என்பதில் அம்மா தீவிரமாக உள்ளார். அதனால்தான் இந்தியாவிற்குப் போனார். டெல்கி தலைமையிடம் மட்டுமல்ல ஜெயலலிதாவிடமும் செல்கிறார். இருவருக்கும் நெருக்கமான உறவுகள் இருக்கின்றன. எப்படியாவது புலிகளை அழிக்க வேண்டுமென இருவரும் நினைக்கின்றனர்.

முன்பு ஒருமுறை - ஜெயலலிதா கேரள மந்திரவாதிகளை சந்திரிகா அம்மாவிடம் அனுப்பியிருந்தார். தனக்கு யாரோ சூனியம் செய்துவிட்டதாகக் கூறி, பேயைக் கலைக்க சந்திரிகா உதவி கோரியிருந்தார்.

பேயைக் கலைத்துவிட்டுத் திரும்பிய மந்திரவாதிகளிடம் கேட்டபோது, அவர்கள் சொன்னார்களாம் - அம்மாவே பெரிய பேய். அங்கு வேறு பேய்கள் இல்லையென.

சென்னையில் பேச்சுக்களை நடாத்த வேண்டும் என முதலில் இந்தியாவிற்கு நட்புக்கரம் நீட்டியிருந்தோம். ஆனால், இந்தியா அக்கறை எடுக்கவில்லை. இப்பொழுது படிப்படியாக இந்தியா ஓரங்கட்டப்பட்ட நிலையில் உள்ளது. அவர்கள் எங்கள் மக்கள் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லை. பல ஆண்டுகளுக்கு முதல் எமது பிரச்சினையில் தலையிட்டு, அது ஒரு யுத்தமாக மாறி புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பெரிய முரண்பாடுகள் ஏற்பட்டன. ஆனால், இன்றும் இந்தியா பகையுணர்வுடன் தான் இருக்கிறது. தலையிடவும் விருப்பம். தலையிடாமல் இருப்பதற்கும் விருப்பம்.

புலிகள் பேச்சுவார்த்தைக்குப் போவார்கள். பின்பு பேச்சுவார்த்தைகளைக் குழப்பிவிடுவார்கள். ஆகவே, நாங்கள் இதற்குள் தலையிடக் கூடாது என இருந்தார்கள். இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், பேச்சுவார்த்தைகள் முன்னேறிச் செல்கின்றன. ஒரு வருடம் போர்நிறுத்தம் செம்மையாகச் செல்கிறது. உலகநாடுகள், பெரிய வல்லரசுகள் இதற்குள் வந்துவிட்டன. அமெரிக்காவின் ஆதிக்கம் இதற்குள் வருகிறது. ஆகவே, இப்போது தன்னை விட்டுவிட்டு தனது பின்வாசலிலுள்ள நாட்டில் அந்நிய சக்திகள் வந்து நிலைகொண்டு - சமாதான முயற்சிகளை மேற்கொள்வதால் தனது செல்வாக்கு இதனால் போய்விடுமோ என்று இந்தியா பயப்படுகிறது.

இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு - எமது மக்களுக்கு நீதி நிலைநாட்டிக்கொடுக்க வேண்டுமென்றால் விடுதலைப் புலிகளுடனும் புலிகளின் தலைமைப்பீடத்துடனும் ஒரு நல்லுறவைப் பேண முயற்சிக்கவேண்டும். அப்படி முயற்சிக்காமல் - ஆனந்தசங்கரியைத் தனியாகக் கூப்பிட்டுக் கதைப்பதோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவை ரகசியமாகக் கூப்பிட்டுக் கதைப்பதோ இந்தப் பிரச்சினைக்கு முடிவைக் கொடுக்காது.

எங்களுக்குத்தெரியும், இவர்கள் என்னென்ன செய்கிறார்கள் என்று. ஆனால் - நாங்கள் இந்தியாவை ஒரு நேசசக்தியாகத்தான் பார்க்கின்றோம். பழைய நிகழ்வுகள் , பகையுணர்வுகள், யுத்தங்களை மறந்து இந்தியா எமது மக்களின் நலனுக்காக விடுதலைப் புலிகளுடன் ஒரு நட்புறவை வளர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் அவர்களும் பங்குகொண்டு ஒரு நியாயமான தீர்வைத் தரவேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில், அமெரிக்கா - மற்றைய நாடுகள் மூலம் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு முழு ஆதரவு கொடுத்தபோதும், தாங்கள் நேரடியாக சம்பந்தப்பட விரும்பவில்லை.

வரும் 14 ஆம் திகதி வொஷிங்ரனில் உதவிவழங்குவது சம்பந்தமான மாநாடு நடக்கிறது. இந்த மாநாட்டுக்கு எமக்கு அழைப்பு வரவில்லை. ஏன் வரவில்லை என்றால், நாங்கள் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட இயக்கம். இந்தத் தடையை நீக்குவதென்றால், நாங்கள் வன்முறையையும் போரையும் கைவிடவேண்டுமென அமெரிக்கா சொல்லிக்கொண்டிருக்கிறது.

நாம் வன்முறையைக் கைவிட்டுவிட்டோம் என்றே நாம் சொல்கிறோம். போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கிறோம். இப்போது யுத்தமில்லை. ஆகவே, தடையைத் தொடரத்தேவையில்லை. தடையை நீக்கிவிட்டு எம்மை சமத்துவ சக்தியாக, தமிழ் மக்களின் பிரதிநிதியாக எம்மை அழையுங்கள் என்று அமெரிக்காவிடம் கேட்கிறோம். ஆனால், அதைப்பற்றி முடிவில்லை. நீங்கள் வன்முறையாளர் என்று கூறுகிறார்கள். அமெரிக்கா எங்களுக்கு வன்முறை பற்றி போதிக்கக்கூடாது. நாம் எம்மக்களுக்காகப் போராடும் போராட்ட சக்தி, ஒரு விடுதலை இயக்கம். இப்போது வன்முறையில் ஈராக்கில் யார் இறங்கியிருக்கிறார்கள், நீங்களோ? நாங்களோ? நீங்கள் தான் வன்முறையில் இறங்கியிருக்கிறீர்கள். நாம் சமாதானத்தைத் தழுவியிருக்கிறோம். எம் மீதான தடையைத் தொடரவேண்டியதில்லை. எம்மை இம்மாநாட்டுக்கு அழைக்காது விடுவதால் சமாதானத்தை முன்னெடுக்க முடியாது. புலி இல்லாத சமாதானம் இலங்கையில் இல்லை. எம்மை நேசக்கரம் கொண்டு இந்தியாவும் அமெரிக்காவும் அழைக்க வேண்டும். காலதாமதமானால் - ஆசிய சமாதானத்திலும் மக்களிலும் உண்மையான ஆதிக்கத்தை செலுத்த முடியாநிலை இந்தியா, அமெரிக்காவுக்கு ஏற்படும்.

எமது அரசியல் உபகுழுவில் இளைஞர்களே இருப்பதாக ஒரு நக்கலடிபடுகிறது. இது ஆரம்ப முயற்சியே. காலப்போக்கில் எம் தாயகத்தில் உள்ள அறிஞர்கள், வெளிநாட்டிலுள்ளோர் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்பதே எமது விருப்பம். எம்மக்களுக்காக முழு நேரம் பணியாற்றக் கூடியவர்கள் வந்தால் அவர்களை அரவணைப்பதே எமது நோக்கம். இளைஞர் முதியோர் என நாம் பிரிக்கவில்லை.

எமக்கென இராணுவக் கட்டமைப்பு, தேசிய பொருளாதாரம் இருக்கிறது. இதைக் கட்டியெழுப்புவது தலைவரின் விருப்பம். இதற்கு வெளிநாட்டில் உள்ளவர்கள் உதவ வேண்டும். எம் இராணுவக் கட்டமைப்பு பலமாக இருக்க வேண்டும். சர்வதேசம் எமது நேர்மையிலும் உறுதியிலும் நம்பிக்கை வைக்கும் வரை பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவோம். சிங்கள தேசம் விரைவில் இப் பேச்சுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். பேச்சுக்களை நம்பி எமது குறிக்கோள்களைக் கைவிடமுடியாது என்றார்.

## யாழ்.நகர....

லோகவதனி சிவலிங்கம் 9A,C. சரிதா இரட்ணசாமி, ரஜிதா தனராஜ், துளசிகா யோகநாதன் ஆகிய மாணவிகள் 9A, S.

**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**

நித்தியா இரட்ணசாமி 10A.

## ஈழ அகதிகளை...

சென்னையில் ஆளுநர் மாளிகையில் அவருடன் நேற்றுக்காலை பேச்சு நடத்திய முதலமைச்சர், விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு நடத்தும் அமைதிப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பு சுமார் இரு மணி நேரம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தமிழக அரசின் துணைச் செயலர், நிதிச் செயலர் ஆகியோரும் கலந்துகொண்டனர். முன்னதாக ஜனாதிபதி சந்திரிகாவை விமான நிலையத்தில் வைத்து தமிழக நிதி அமைச்சர் சி.பொன்னையன் வரவேற்றார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.04.2003 அன்று பொன்னுத்துரை ஸ்ரீதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.